2021 - இதழ் 05 இலவசம்

## வைகாசி - 2021

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 05

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்;**
**உங்களை நிந்திக்கிறவர்களுக்காக**
**ஜெபம்பண்ணுங்கள்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 05


பக்கம் **4**

### உயர்ந்த ஸ்தானம்

தேவபிள்ளையின் வாழ்க்கை தேவனை அறியாதோரின் வாழ்க்கையைப் போன்று இருக்கக்கூடாது. இயேசு எம்மை வழிநடத்த ஆயத்தமுள்ளவராகவே இருக்கிறார்.

பக்கம் **6**

### தேவனால் அறியப்பட்டவர்கள்

எனவே தேவ சமுகம் நம்முடைய சபை நடுவிலே, நம் மத்தியிலே கடந்து வருவதை, எந்த மனிதனோ, உலக பொருளோ, உலக தகைமைகளோ நிர்ணயிக்க முடி யாது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். நாம் ஒவ் வொருவரும் தேவனுடைய கரத்தின் கிரியைகளாக இரு க்கின்றோம்.

பக்கம் **13**

### பிரசங்கக் குறிப்புகள்

சற்று சிந்தித்துப் பாருங்கள்! இந்த பூமியிலே, பிதா வாகிய தேவனுடைய நாமம் என் வாழ்க்கையின் வழி யாக மகிமைப்படும்படி வாழப் போகின்றேனா?

பக்கம் **15**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 15ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... வைகாசி 2, 7, 10, 12, 13, 14, 15, 16, 17, 20, 21, 25, 27, 28

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... வைகாசி 2, 3, 7, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 20, 21, 25, 28

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... வைகாசி 2, 3, 4, 10, 11, 18, 20, 21, 22, 25, 28, 29, 30

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... வைகாசி 1, 5, 15, 17, 18, 19, 23, 26, 29, 30

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... வைகாசி 1, 5, 7, 8, 9, 11, 12, 15, 18, 20, 27, 28, 29

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... வைகாசி 6, 13, 17, 20, 21, 22, 24, 30, 31

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... வைகாசி 3, 7, 15, 18, 20, 29

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... வைகாசி 1, 3, 6, 9, 12, 15, 18, 19, 20, 22, 24, 26, 27, 28

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... வைகாசி 7, 9, 14, 21, 22, 29

**பொறுமையோடு காத்திருங்கள்**

... வைகாசி 4, 8, 13, 17, 19, 23, 25, 27

**தேவ நீதி வெளிப்படும்**

... வைகாசி 1, 13, 17, 25

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... வைகாசி 5, 6, 7, 10, 12, 21, 22, 29

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... வைகாசி 1, 2, 6, 7, 12, 15, 19, 21, 24, 26, 27, 30, 31

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... வைகாசி 2, 10, 11, 27


gtachurch.ca

# உயர்ந்த ஸ்தானம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான் என்று பரிசுத்த வேதாகமத்தில் நீதிமொழிகளில் வாசிக்கிறோம்.

நாம் தேவன் எமக்குத்தந்த ஸ்தானத்தைவிட்டு அலையாமல் அதில் உறுதியாகவும் நிலையாகவும் தரித்திருப்போமாக.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசங்கித்த போது:
“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல்வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.” என்று கூறியுள்ளார்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் எபேசு சபைக்கு எழுதிய நிருபத்தில், “முற்காலத்தில், நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.” என்று எழுதியுள்ளார்.

நாமும் கர்த்தராகிய இயேசுவை அறிவதற்கு முன்பாக அந்தகாரமாயிருந்தோம். பாவ வாழ்க்கையில் பழக்கப்பட்டவர்களாக பரிசுத்த வாழ்வைப்பற்றிய உணர்வில்லாமல் வாழ்ந்து வந்தோம். கர்த்தராகிய இயேசுவை அறிந்து அவர் தரும் பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் ஏற்றுக்கொண்டபோது, எமது வாழ்க்கை மாற்றமடைந்து பரிசுத்த வாழ்வை வாழத்தக்கதாக எமது இருதயம் உணர்வடைந்தது. நாம் அது முதல் அந்தகாரமாயில்லாமல் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாற்றப்பட்டோம்.

இதைக்குறித்துத்தான் இயேசு கிறிஸ்து நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்று கூறியுள்ளார். பரிசுத்த வாழ்வை வாழத்தக்கதாக வெளிச்சமாக்கப்பட்ட நாம் எப்போதும் விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காகக் காணப்படவேண்டும்.

விளக்குத் தண்டின்மேல் வைக்கப்படுவது என்பது வாழ்வில் ஓர் உறுதியான தீர்மானம். அவ்விதமாய் வைக்கப்பட்ட விளக்கு சுற்றிலும் தனது வெளிச்சத்தைத் தடையின்றி பிரகாசிப்பது போன்று எமது வாழ்வில் எப்போதும்

gtachurch.ca

இயேசு கிறிஸ்துவின் சாட்சியாக நாம் விளங்கவேண்டும். இதற்கேற்ப எமது வாழ்க்கை காணப்படாத போது, நாம் தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான் என்ற வாக்கியத்தின்படி இருப்போம்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் எபேசு சபைக்கு எழுதிய நிருபத்தில் தொடர்ந்து எழுதும்போது: ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார் என்று அறிவுரை கூறுகின்றார்.

தேவனை அறியாமல் அசட்டைபண்ணி வாழும் வாழ்க்கையானது மரித் தோரின் வாழ்க்கையாயுள்ளது. மரித்தோர் அந்தகாரத்திற்குட்பட்டு வாழ்கின் றார்கள். கர்த்தருக்குள் வெளிச்சமாக்கப்பட்ட வெளிச்சத்தின் பிள்ளைகள் மரித்தோருக்கொத்த வாழ்க்கை வாழ்வது, தூங்குகின்ற வாழ்க்கையாயு ள்ளது. அதில் வெளிச்சத்துக்குரிய கிரியைகள் எதுவுமில்லை. தேவபிள்ளை யின் வாழ்க்கை தேவனை அறியாதோரின் வாழ்க்கையைப் போன்று இருக் கக்கூடாது. இயேசு எம்மை வழிநடத்த ஆயத்தமுள்ளவராகவே இருக்கிறார்.

## ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞான முள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளான தால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

தம்மிடத்தில் வருகின்ற எவரையுமே புறம்பே தள்ளாத இயேசு நல்ல மேய்ப்பனாக வழிநடத்துகின்றவராயுள்ளார். தேவன் எம்மை தமது பிள்ளை களாய் மாற்றியுள்ளார். ஆகவே நாம் கலங்காமல் திகையாமல் எமது வாழ்வை தேவனுக்கே ஒப்புவித்து, விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்காக பிரகாசிப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

gtachurch.ca

# தேவனால் அறியப்பட்டவர்கள்

ஒரு கிராமத்தின் வருடாந்தர ஒன்றுகூடல் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுவதற்குரிய ஆயத்தங்கள் யாவும் செய்யப்பட்டுவந்தது. அந்த விழாவை சிறப்பிக்கும்படிக்கு வருடாவருடம் பட்டணத்திலுள்ள சில விசேஷ விருந்தினர்களும், அதிகாரிகளும் வருவதுண்டு. குறிப்பிட்ட ஆண்டொன்றிலே, அந்தக் கிராம ஒன்று கூடலின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவாக இருந்ததினால், தேச மட்டத்திலே பிரபல்யமாக இருந்த, உலகலாவிய பாடல்களை பாடும் ஒரு குறிப்பிட்ட பாடகரை, அந்த விழாவை சிறப்பிக்கும்படி அழைப்பு விடுத்திருந்தார்கள். அந்த பாடகரின் பிரதிநிதியொருவர் அந்த விழாவை ஒழுங்கு செய்யும் நிர்வாகப் குழுவை, தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவர்களோடு அந்த விழாவின் விபரங்களைப் பற்றி உரையாடினார். இந்த விழா எத்தனை நாட்கள் நடைபெறும்? இந்த விழாவிற்கு எத்தனை ஜனங்கள் வரு வார்கள்? ஊர் ஜனங்களை தவிர வேறு யாராவது வருவார்களா? என்று பல கேள்விகளை கேட்டுக் கொண்டார். மேலும் அவர் கூறுகையில், குறிப்பிடப்பட்ட பாடகர் அந்த விழாவிற்கு சமுகமளிப்பதாயின், பாடகரி னதும், அவரோடு அவருக்கு ஆதரவாக வரும் குழுவினருக்குமுரிய போக்குவரத்து, தங்குமிட வசதிகள் யாவும் ஆயத்தப்படுத்தப்பட வேண் டும். அத்துடன், நன்கொடையாக அவருக்கு குறிப்பிடப்பட்ட ரொக்கப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அதற்கு அந்த விழாவின் நிர்வாகக் குழுவினர்: போக்குவரத்து, தங்குமிட வசதிகளை ஆயத்தம் செய்து கொடுப்போம், ஆனால் நீங்கள் குறிப்பிட்ட ரொக்கப்ப ணத்தின் தொகை எங்கள் பெலனுக்கு அப்பாற்பட்டது. ஆனால் இந்த ஆண்டு விழாவானது எங்கள் கிராம மக்களுக்கு மிகவும் முக்கியமானது, எனவே எங்களால் கொடுக்கக்கூடிய சிறிய நன்கொடையை ஏற்றுக் கொண்டு, இந்த விழாவை சிறப்பிக்க, வருகை தரும்படியாக தயவாக கேட்டுக் கொண்டார்கள். குறிப்பிடப்பட்ட பாடகரின் பிரதிநிதிகளை கொண்ட குழு அந்தக் கிராமத்தில் நடக்கவிருக்கும் விழாவையும், அதில் பங்குபெறும் மக்கள் யார் என்பதையும், அதனால் பாடகருக்கு வரும் நன்மைகளையும் அலசி ஆராய்ந்து பார்த்த பின்பு, அந்த விழாவினால் பாடகருக்கு பெரிதான ஆதாயமில்லை என்பதை அறிந்து கொண்டார்கள். சில நாட்களுக்குப் பின்பு, குறிப்பிட்ட பிரதிநிதி, அந்த கிராம நிர்வாக குழு வினரோடு மறுபடியும் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு, விழாவின் நிர்வாகிகளை நோக்கி: உங்கள் அழைப்பிற்காக மிகவும் நன்றி! ஆயினும் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணத்தினால், பாடகர் உங்கள் விழாவில் கலந்து கொள்ள முடியாததையிட்டு மிகவும் மனம்வரு ந்துகின்றார் என்று கூறினார்.

மேற்கூறப்பட்ட சம்பவங்கள், உலகளாவிய பிரபல்யமான நட்சத்திரங் கள், பாடகர்கள், விளையாட்டுவீர்கள் மத்தியிலே நடைபெறலாம். அவ ர்கள் செய்வது நியாயமாகவோ அல்லது அநியாயமாகவோ இருக்கலாம் அதை நியாயந்தீர்ப்பது நமக்குரிய வேலை அல்ல. ஆனால் இன்றைய நாட்களிலே இத்தகைய சம்பவங்கள் கிறிஸ்தவ வட்டாரங்களுக்குள்ளும் நடைபெற்றுவருவதை நாம் அவ்வப்போது கேள்விப்படுகின்றோம். அதா வது, ஒரு சில மனிதர்கள், ஒரு ஆராதனையில் கலந்து சிறப்பிக்கும்படி அழைப்பை பெற்றுக் கொள்ளும் போது, அந்த ஆராதனையில் கலந்து

கொள்வதற்கு முன்பு, அங்கே எத்தனை பேர் வருகை தருவார்கள், எப்படிப்பட்ட ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றது, தங்குமிட வசதிகள் எப்படி இருக்கின்றது, தங்களுக்கு இதனால் வரும் ஆதாயம் என்ன என்று ஆராய்ந்து பார்க்கின்றார்கள். இப்படியாக காரியங்களை நடப்பிப்பவர்களை குறித்து விமர்சிப்பதோ அல்லது அவர்களை நியாயந்தீர்ப்பதோ இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. அதனால் நமக்கு எந்த பிரயோஜனமும் வரப்போவதில்லை. ஒரு மனுஷன் எதை விதைக்கின்றானோ அதையே அறுவடை செய்வான். பொதுவாக இந்த உலகிலே மனிதர்கள் பெயரையும், புகழையும், சுய ஆதாயத்தையும் தேடுகின்றார்கள். தாங்கள் செல்லுமிடங்களிலே தங்களுக்கென அநேக ரசிகர்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். இது இந்த உலகத்தின் போக்காக இருக்கின்றது.

வானத்தையும் பூமியையும் படைத்த உன்னதமான தேவனுடைய பிரசன்னம் நம் மத்தியிலே இருப்பதற்கு எத்தனை ஜனங்கள் கூடி வரவேண்டும்? பரிசுத்தர் நம் மத்தியிலே வாசம் செய்வதற்கு எதை நாம் கொடுக்க வேண்டும்? உலக ஐசுவரியத்தினாலோ அல்லது கண்களைக் கவரும் விலையுயர்ந்த கட்டிடங்களினாலோ, பெருந்தொகையான ஜனக் கூட்டங்களினாலோ தேவனை கவர்ந்து கொள்ள முடியுமோ? உன்னதமானவரின் அபிஷேகத்தை விலை கொடுத்து வாங்க முடியுமோ? இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர் ஏழை எளியவர்கள் என்று எவரையும் தள்ளி விடுவாரோ? சர்வ வல்லமையுடையவரின் பிரசன்னமாகுதலை நம் மத்தியில் வராதபடிக்கு யார் தடுத்து நிறுத்த முடியும்? இவைகள் குறித்து சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

## பிரபல்யமானவர்கள் யார்?

இந்த உலகிலே, தேவனாகிய கர்த்தராலே அபிஷேகம் பெற்று, தாழ்மையுள்ள இருதயத்தோடு தங்களுக்கு கொடுக்கப்பட்ட தேவ ஊழியத்தை உண்மையும் உத்தமுமாக நடப்பிக்கும் பொருளாசையற்ற தேவ தாசர்கள் இருக்கின்றார்கள். ஒருவேளை அவர்கள் உலக பிரசித்தி பெற்ற ஊழியர்களாகவோ அல்லது யாரும் அறியாத குக்கிராமத்திலோ, ஊழியம் செய்யும் ஒரு எளிமையான ஊழியராகவோ இருக்கலாம்; அல்லது ஒரு சாதாரண விசுவாசியாக இருக்கலாம். இவர்கள், தங்கள் வாழ்க்கையிலே, பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள். இவர்களை கர்த்தர் அறிந்திருக்கின்றார். இவர்களே கர்த்தருடைய பார்வையிலே பிரபல்யமானவர்கள்.

அந்நாளில் (நியாயத்தீர்ப்பின் நாளிலே) அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா. உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா. உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா. என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்தேயு 7:22-23)

அன்றியும் மனுஷகுமாரன் (ஆண்டவராகிய இயேசு) தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல

ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள் தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள் அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள் காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுது, நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும், காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை. அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை. வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்கவரவில்லை என்பார். அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது, அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று இயேசு கூறியிருக்கின்றார். (மத்தேயு 25:31-46)

## தேவனுடைய பிரசன்னம் எங்கே உண்டு?

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி 3:16)

அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிரு ந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபே ராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறா ர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார் (மத்தேயு 18:19-20)

யூதருடைய பண்டிகையின் நாளிலே திரளான ஜனங்கள் எருசலேமிலே கூடுவார்கள். அப்படியாக ஒரு சமயம் இயேசு எருசலேமுக்குப் போனார். எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முத லான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கல ங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்கு வான் தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்தி ருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்த னென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்பு கிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். பாருங்கள், எருசலேமிலே திராளாக ஜனங்கள் இருந்தபோதும் கர்த்த ராகிய இயேசுவின் கண்களோ யாவராலும் கைவிடப்பட்ட ஒரு மனிதன் மேல் இருந்தது. (யோவான் 5:1-9)

ஒரு வேளை தேவ பிள்ளைகள் ஏழைக் குடிலில் கூடினாலும், மாளிகை களிலே கூடிவந்தாலும், சிறைச் சாலையில் இருந்தாலும், பெரும் கூட்ட மாக இருந்தாலும், சிறு கூட்டமாக இருந்தாலும், கைவிடப்பட்டு வைத்திய சாலையிலே தனி மனிதனாக இருந்தாலும், தெருவோரமாக இருக்கும் ஏழையாக இருந்தாலும், தேவனாகிய கர்த்தரை உண்மையாய் கூப்பிடு கின்ற வேளையிலே அவர் அவர்களின் ஜெபத்தை கேட்கின்றார். அவர் கள் மத்தியிலே அவர் வாசம் செய்கின்றவராய் இருக்கின்றார்.

## தேவ பிரசன்னத்தை யார் தடுக்க முடியும்?

உலக பிரசித்திபெற்ற மனிதர்கள் உங்கள் மத்தியிலே வருகை தருவதற்கு முன் பல முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும் என்று பல கோரிக்கைகளை முன் வைப்பார்கள். அந்தக் கோரிக்கைகளில், பணம், போக்குவரத்து, தங்குமிடம், ஜனங்களின் எண்ணிக்கை, அழைப்பவர் களின் தகுதி, பாதுகாப்பு போன்றவைகள் அடங்கும். அவை அவசியமா னவைகளாகவோ அல்லது அவசியமற்றவைகளாகவோ இருக்கலாம். சில வேளைகளிலே, பிரசித்தி பெற்ற மனிதர்கள் உங்கள் மத்தியிலே வர

விரும்பினாலும், அவர்கள் வர முடியாதபடிக்கு உலக போக்கினால் உண்டான தடைகள் இருக்கலாம். ஆனால் ஆண்டவராகிய இயேசு உங்கள் மத்தியிலே வாசம் செய்வதை யார் தடுத்து நிறுத்த முடியும்? மற்ற மனிதர்கள் தடுக்க முடியுமா? அவர்கள் இந்த உலகத்திலே ராஜாக்களாக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும், ஆண்டவராகிய இயேசு உங்கள் மத்தியில் வாசம் செய்வததை நீங்கள் மட்டுமே தடுக்க முடியும். வேறு யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை. கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசாயா 59:1-2). வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. (நீதிமொழிகள் 28:9).

பாபிலோனின் ராஜா, தான் செய்த சிலையை வணங்க மறுத்த தானியேலுடைய நண்பர்களின் மேல் கடுங் கோபம் மூண்டவனாய், அவர்களை கொலை செய்யும்படிக்கு, ஏழுமடங்கு அக்கினிச் சூலையிலே போடும்படி கட்டளை கொடுத்தான். தானியேலின் நண்பர்கள் அக்கினியின் மத்தியிலே போடப்பட்ட போது, அங்கே தேவனுடைய பிரசன்னம் அவர்களோடு இருந்தது. (தானியேல் 3:25-26)

ஏரோது ராஜா, தேவ ஊழியராகிய பேதுருவை பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான். ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான் காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான் அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது, அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. (அப்போஸ்தலர் 12:1-10)

ஒரு சமயம், பிலிப்பு பட்டணத்திலே தேவ ஊழியர்களாகிய பவுலும், சீலாவும் நற்செய்தியை கூறிய போது, ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி, அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப்பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தான். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள் காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம்

திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. (அப்போஸ் தலர் 16:22-26)

மகதலேனா மரியாள் எனப்பட்ட ஸ்திரியினிடத்திலிருந்து ஆண்டவராகிய இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். இயேசு சிலுவையிலே மரி த்து பின்பு, அவர் அடக்கப்பண்ணப்பட்ட கல்லறையிலே அவருடைய சரீர த்தை காணாதபடியினாலே, அவள் கல்லறையின் அருகில் நின்று அழுது கொண்டிருந்தாள். அவளுக்கு பின்னாக இயேசு நின்றார்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள். இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக் கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல் லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள் அதற்குப் போதகரே என்று அர்த்தமாம். இவ்வண்ணமாக மகத லேனா மரியாளை இயேசு தேற்றினார். (யோவான் 20:11-17 மாற்கு 16:10)

எலியா என்னும் மனிதன் கர்த்தருடைய கரத்திலே ஒரு வல்லமையுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டவன். அவனுடைய நாட்களிலே தேவ ஜனங் களிலே பலர் பின்மாற்றமடைந்து, பாகால் என்னும் விக்கிரகத்தை வண ங்கி வந்தார்கள். அந்நாட்களிலே, எலியா கர்த்தரை நோக்கி: சேனை களின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன் இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள் உம் முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டய த்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கி றேன் என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான். கர்த்தர் அவ னுக்கு பிரதியுத்தாரமாக: பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களை யும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார். அந்த ஏழா யிரம்பேர் யார் என்று எலியா அறிந்திருக்கவில்லை, அதனால் தான் ஒருவன் மட்டும்தான் தேவனுக்கென்று மிஞ்சியிருக்கின்றேன் என்று அவன் எண்ணினான். ஆனால் தேவனாகிய கர்த்தரோ அவர்கள் ஒவ்வொருவரை யும் பெயர் பெயராக அறிந்தவராயிருந்தார். அவ்வண்ணமாகவே தேவனா கிய கர்த்தர் இன்றும் தமக்கு பயந்து தமது வழியிலே நடக்கின்ற ஒவ்வொரு ஊழியரையும், தம்முடைய ஜனங்களையும் தனிப்பட அறிந்திருக்கின்றார்.

வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் (லூக்கா 10:7). போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக் குப் பாத்திரனாயிருக்கிறான் (1 தீமோ 5:18) என்ற பிரகாரமாக, உழிய ர்களையும் ஊழியங்களையும் தாங்குவது நம்முடைய கடமை. அதை மனப்பூர்வமாக நாம் செய்து வரவேண்டும். அப்படிச் செய்வது நம்முடைய பாக்கியம். ஆனால் உத்தமமாக வாழ்கின்ற ஊழியராக இருந்தாலும், விசுவாசியாக இருந்தாலும், அவர்கள் இந்த உலக பொருட்களையல்ல தேவனையே நம்பியிருக்கின்றார்கள். பஞ்ச காலத்திலும் தேவன் தம்மு டையவர்களை போஷிக்க அறிந்திருக்கின்றார்.

தீர்க்கதரிசியாகிய ஆபகூக் கூறிய பிரகாரமாக: அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஓலிவ

மரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன் அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார். (ஆப-கூக் 3:17-19)

## ஒரு ஆங்கிலப் பாடலின் வரிகள்...

முக்கியமான நபர்கள் என்று கூறும் போது, தலைவர்கள், தொலை காட்சியில் வரும் பிரபல்யமான நட்சத்திரங்களை குறித்து நீங்கள் பேசிக் கொள்வீர்கள். ஆனால் அவர்கள் யாவரையும்விட மிகவும் பெரியவர் ஒருவரை எனக்குத் தெரியும். அவருக்கு அருகில், நீங்கள் அறிந்த பிரபல்யமான நட்சத்திரங்கள் யாவரும், மிகவும் அற்பமானவர்களாக இருப்பார்கள். நான் அவரோடு பேசும்போது, நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர் ஆர்வத்துடன் செவி கொடுக்கின்றார். அவர் தற்போது இங்கே இல்லை, அவர் அலுவலாக வெளியே போய்விட்டார் என்று சொல்லுவதற்கு செயலாளர்கள் கூட அவருக்கு இல்லை. அவர் என் இயேசு, நான் அவரோடு ஒவ்வொரு நாளும் பேசுகின்றேன் என்று ஒரு அழகான ஆங்கிலப் பாடலின் வரிகள் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே தேவ சமுகம் நம்முடைய சபை நடுவிலே, நம் மத்தியிலே கடந்து வருவதை, எந்த மனிதனோ, உலக பொருளோ, உலகத் தகைமைகளோ நிர்ணயிக்க முடியாது என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய கரத்தின் கிரியைகளாக இருக்கின்றோம்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயை நோக்கி: ஜனங்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும்படிக்கும், மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு என்றும் அவனுக்குக் கூறினார். (யாத்திராகமம் 25:40) மோசே, கர்த்தர் தனக்கு கற்பித்தபடியே ஆசாரிப்பு கூடாரத்தின் சகல வேலைகளையும் செய்து முடித்தான். அப்பொழுது தேவ மகிமை அந்த கூடாரத்தை மூடியது. அது எதனால் உண்டானது? தேவன் கற்பித்தபடி நாம் நம்முடைய வாழ்வில் காரியங்களை நடப்பிக்கும் போது அங்கே தேவனுடைய பிரசன்னம் நிறைவாக இருக்கும். ஒரு மனிதன் உலக பிரசித்தி பெற்றவனாக இருந்தாலும், தன் வாழ்நாட்களிலே தன் கிராமத்தைவிட்டு வெளியே செல்லாதவனாக இருந்தாலும், யாரும் அறியாத கடையான திசையிலே வாழ்கின்றவனாக இருந்தாலும், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்வில் செய்கின்றவனே, தேவனால் அறியப்பட்டவனாக இருக்கின்றான்.

அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு பலன் அளிக்கும் கர்த்தர் உங்களை ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடத்திச் செல்வாராக. ஆமேன்!

# கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - கொலோசேயர் 3:24

தேவனுடைய சமுகத்திற்கு நான் வருகின்றபோது என்னுடைய உள்ளத்திலே மனமகிழ்ச்சி இருக்கின்றதா? அல்லது துக்கத்தோடே தேவனுடைய சமுகத்திற்கு வருகின்றேனா? கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது நான் மகிழ்ச்சியாயிருந்தேன் என்று சங்கீதக்காரன் கூறியிருக்கின்றார். ஏனெனில் தேவ சமுகத்திலே சந்தோஷம் உண்டு. அப்படி என் உள்ளத்திலே சந்தோஷம் இல்லாதிருந்தால், ஏன் என்னுடைய உள்ளம் இன்று சந்தோஷமில்லாமல் வறட்சியடைந்த நிலையில் இருக்கின்றது என்று நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஏலி என்னும் ஆசாரியனுடைய நாட்களிலே, அவருடைய குமாரர்களாகிய ஓப்னி, பினெகாஸ் பேலியாளின் மக்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை. இவர்களின் துன்மார்க்கத்தின் நிமித்தம், மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பேலியாளின் மக்களாகயிருந்த ஏலியின் குமாரர்கள் மத்தியிலும் பிள்ளையாண்டானாகிய சாமுவேல் என்பவன் ஆலயத்திலிருந்து வளர்ந்து வந்தான். ஒருவேளை ஏலியின் குமாரர்கள் சாமுவேலையும் அற்பமாக எண்ணி, கடினமாக நடத்தியிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியிலும் சாமுவேல் கர்த்தருக்கு முன்பாக உத்தமமுள்ளவராக இருந்தார். கர்த்தர் சாமுவேல் வழியாக தம்முடைய ஜனங்களை வழிநடத்தி வந்தார். சாமுவேலுக்கு வயது சென்றபோது, சாமுவேலுடைய குமாரர்கள், சாமுவேலைப் போல கர்த்தருக்கு முன்பாக உத்தமமாக நடக்கவில்லை. அந்த வேளையிலே தேவ ஜனங்களோ, ஏலியின் குமாரரின் துன்மார்க்க வழிகள் மத்தியிலும், பெரிதான தீர்க்கதரிசியாக சாமுவேலை உயர்த்திய தேவனுடைய கிரியையும், தேவனே ராஜாதிராஜாவாக இருந்து ஆளுகை செய்கின்றவர் என்பதையும், அவரே தங்களை வழிநடத்திவந்த தேவன் என்பதையும் மறந்து, தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று முறையிட்டார்கள்.

இவ்வண்ணமாக அவர்கள் அன்று தேவனுடைய ஆளுகையை புறக்கணித்தார்கள். இன்றும் அதே பிரகாரமாக தேவ அழைப்பை பெற்ற ஜனங்கள் தங்களை அழைத்த தேவனை மறந்துபோய் விடுகின்றார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் தம்முடைய திருப்பணியை முடித்து பரலோகத்திற்கு எழுந்தருளும் முன்பு, தம்முடைய சீஷரை நோக்கி: நான் சென்று போனபின்பு, உங்களை திக்கற்றவர்களாகவிடேன். உங்களோடு என்றென்றுமிருந்து உங்களை நடத்தும்படிக்கு, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அனுப்புவேன். அவர் வந்து உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார் என்று வாக்குத்தத்தத்தை கொடுத்திருக்கின்றார். ஆனால், சில தேவ ஜனங்களோ,

எங்களுக்கு தேவன் ஏற்படுத்திய இந்த அமைப்பு வேண்டாம் என்று வேறு வழிகளை தேடுகின்றார்கள்.

கர்த்தர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார் வீரனுடைய கால்களில் பிரியப்படார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். ராஜாக்கள், வீரர்கள், குதிரைகள் ஜன ங்களை விடுதலை செய்ய முடியாது. விடுதலை கர்த்தராலே உண் டாகின்றது. இன்று அநேக ஜனங்களுக்கு கர்த்தருக்காக காத்திருப்பத ற்கோ பொறுமையில்லை. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடங்கொடுப்பதற்கு விரும்பவில்லை. அன்று தேவனுடைய ஆளுகையை இஸ்ரவேலர் தள்ளிவிட்டது போல, இன்றும் தேவ வழிநடத்துதலை தள் ளிவிட்டு, தங்கள் சொந்த வழிகளை தேடுகின்றார்கள். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழி கள். தேவனுடைய வழியோ அது ஜீவனும் சமாதானமுமுள்ளதாய் இருக் கின்றது. ஆகவே, நாம் தேவனுடைய வழியை அறிந்து கொள்ளத்தக்க தாக பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் நமக்கு இன்றியமையாதது.

இன்று நாம் நம்முடைய வாழ்வை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போஸ்தலராகிய பவுலின் நாட்களிலே, சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார் கள். சிலர் பவுலின் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவித் தார்கள். சுவிசேஷத்திற்காக பவுல் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவ னென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவித்தார்கள். பிரியமானவர்களே, அது போலவே இன்றும் சிலர், தேவ சித்தத்தின்படி அன்பினாலே சத்தி யத்தை அறிவிக்காமல், தாம் விரும்பியபடி கிரியைகளை நடப்பிக்க துணி கரம் கொள்கின்றார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லர் ஆனால் இவர் களோ தங்களை தாங்களே, கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கி ன்றார்கள்.

நீங்கள் பாவத்திற்கு என்று மரித்து, நீதிக்கென்று பிழைக்கத்தக்கதாக, கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், தேவனுடைய பிள்ளைகளாக வாழ எழுந்ததுண்டானால், கிறிஸ்துவின் சாயலை அடையும்படி நீங்கள் எழுந்ததுண்டானால், இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே நீங்கள் எதைச் செய்தாலும், பிதாவாகிய தேவனுடைய நாமம் மகிமைப்படத்தக்கதாக, அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வ மாய்ச் செய்யுங்கள்.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! இந்த பூமியிலே, பிதாவாகிய தேவனுடைய நாமம் நம் வாழ்க்கையின் வழியாக மகிமைப்படும்படி வாழப் போகின் றோமா? அல்லது நம்மை சூழ உள்ள மனிதர்கள் மத்தியிலே நற்பெய ரைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரயாசப்படப் போகின்றோமா? நாம் பிதாவாகிய தேவனுடைய நாமம் நம் வாழ்வின் வழியாக மகிமைப்படத்தக்கதாக கிரியைகளை நடப்பிப்போம்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# ஆவிக்கேற்ற மாளிகை

ஒரு மனிதனானவன், இரண்டு தட்டுக்களையுடைய அழகான மாளிகை யொன்றை கட்டினான். அந்த வழியாய் போகின்றவர்கள் நின்று பிரமிக்கத்தக்கதாக அது மிகவும் கவர்ச்சியுள்ளதாக இருந்தது. அந்த மாளிகையானது நவீன உபகரணங்களையும், சகல வசதிகளையுமுடையதாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த மாளிகையின் கட்டுமானப் பணிகள் யாவும் முற்றாக முடிவடைந்த பின்னர், அந்த மாளிகையின் சொந்தக்காரன், அந்த மாளிகையின் அமைப்பை பரிசோதிப்பதற்காக தேர்ச்சி பெற்ற கட்டிட நிபுணர்களை அழைப்பித்தான். நிபுணர்களின் அறிக்கையின்படி, அந்த மாளிகையானது, சிறந்த முறையிலே வடிவமைக்கப்பட்ட போதிலும், அதன் அஸ்திபாரத்தில் சில பிரச்சனைகள் இருப்பதாகவும், அதினால் வருங்காலங்களிலே அதை பரிபாலனம் செய்ய பெரும் செலவுகளும் நஷ்டங்களும் ஏற்படலாம் என்று தெரிவித்தார்கள். பாருங்கள் ஒரு அழகானதும் சகல வசதிகள் நிறைந்ததுமான அந்த மாளிகையின் அஸ்திபாரம் ஸ்திரமாக போடப்படவில்லை. அஸ்திபாரமானது உறுதியாய் நிலைத்திருக்காவிட்டால், அதன்மேல் விலையேறப்பட்ட வஸ்துகளைப் போட்டு, கோடிக் கணக்காக பணத்தை செலவழித்து கட்டினாலும் அது அநேக காலத்திற்கு நிலைத்திருக்கப் போவதில்லை. பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையின் அஸ்திபாரம் எங்கே போடப்பட்டிருக்கின்றது? ஜீவனுள்ள நம்பிக்கையாகிய கிறிஸ்து மூலமாய் ஸ்திரப்படிருக்கின்றதா? உங்கள் வாழ்க்கையிலே உண்டாகும் புயல் போன்ற அனுபவங்களும், அக்கினி போன்ற சோதனைகளும் அதை உறுதிப்படுத்தும். நம்முடைய வாழ்க்கையின் அஸ்திபாரமானது, விலையேறப்பெற்றதுமாயிருக்கிற, ஜீவனுள்ள கல்லாகிய ஆண்டவராகிய இயேசுவின் மேல் ஸ்திரப்பட்டிருக்க வேண்டும். அந்த உறுதியான கன்மலையின் மேல், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாக இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் கட்டப்பட வேண்டும். வாழ்க்கையில் உண்டாகும் அக்கினி, புயல் போன்ற அனுபவங்கள், அந்த ஆவிக்குரிய மாளிகையை பரிசோதிக்கும்போது இயேசு கிறிஸ்துவின்மேல் உறுதியாய் நிலைத்திருப்பவன் என்றென்றும் அசைக்கப்படுவதில்லை.

**1 பேதுரு 2:5**

ஜீவனுள்ளகற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.

**ஜெபம்**: அன்பின் பிதவாகிய தேவனே, வாழ்வில் ஏற்படும் மலை போன்ற சோதனைகளையும், புயல் போன்ற அனுபவங்களையும் மேற்கொள்ளும்படி கிறிஸ்துவின் மேல் நிலைகொண்டவர்களாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுடைய வீட்டார்

ஒரு கிராமத்தில் வசித்து வந்த அதிகாரியொருவன் அந்த கிராமத்தில் சட்ட திட்டங்களை அமுலாக்கும் நிர்வாகக்குழுவில் முக்கிய அங்கத்தவனாக இருந்தான். ஒரு நாள் அவனுடைய பிள்ளைகளிலொருவன், அயலிலுள்ள மனிதனொருவனுக்கு அநீதியான செயலொன்றை செய்துவிட்டான். அநீதி செய்தவன் அதிகாரியின் மகனாக இருந்ததால் அவன் செய்த செயலைக் குறித்து எவரும் பேசத் துணியவில்லை. அதிகாரியாகிய அவன், தன் மகன் செய்த குற்றத்தை அறிந்திருந்தபோதும், அறியாதவனைப் போல பாராமுகமாகவிட்டுவிட்டான். இப்படிப்பட்ட செயல்கள் இந்த உலகத்திலே சாத்தியமாக இருக்கலாம். ஆனால் நாம் தேவனுடைய வீட்டாராக இருக்கின்றோம். நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். நாம் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கின்றோம். சர்வ வல்லமையுள்ள தேவனே எங்கள் வீட்டிற்கு அதிகாரியாக இருக்கின்றார். நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்;கிருபையும் சத்தியமும் அவருக்கு முன்பாக நடக்கும். அவர் தன்னுடைய வீட்டைச் சேர்ந்தவர்களாகிய நம்மை சுத்தம் செய்கின்றார். ஆண்டவராகிய இயேசு சொன்னார்: நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து அதிக கனிகளைக் கொடுக்கும்படி, நம்மை சுத்தம்பண்ணுகிறார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே தொடங்குங்காலமாயிருக்கிறதால், நாம் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருப்போமாக. கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்த நம்மை தம்முடைய ராஜ்யத்தின் பிள்ளைகளாக மாற்றியிருக்கின்றார். கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு நாம் பிரியமான பிள்ளைகளைப்போல நம்முடைய பிதாவாகிய தேவனைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும்.

**எபிரெயர் 12:6**

**கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு என்னை உமக்கென்று வேறுபிரித்திருக்கின்றீர். அந்த மேன்மையை உணர்ந்தவனா(ளா)க, உம்முடைய ராஜ்யத்தின் பிள்ளையாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இயேசு இல்லாத வாழ்வு

நான் குடிப்பதில்லை, வெறிப்பதில்லை, புகைப்பதில்லை, தூஷணமான வார்த்தைகளைப் பேசுவதில்லை, மற்றவனுக்கு கெடுதி செய்வதில்லை. பிறப்பிலும் வளர்ப்பிலும் நான் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று தங்கள் சன்மார்க்கமான வாழ்க்கையை குறித்து சில மனிதர்கள் பெரிமிதமாக பேசுவதுண்டு. இவ்வண்ணமாக ஒரு ஐசுவரியமுள்ள வாலிபன் ஆண்டவராகிய இயேசுவிடனித்தில் வந்து: கொலை, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி என்னிடத்தில் இல்லை. என் பெறறோரை நான் கனம் பண்ணுகின்றேன். என்னுடைய அயலவனை நேசிக்கின்றேன். இவைகளை எல்லாம் என் சிறுவயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன். நித்தியஜீவனை பெற்றுக் கொள்ளும்படிக்கு இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்று கேட்டான். அதற்கு இயேசு: 1. நீ உலக ஐசுவரியத்தின்மேலுள்ள ஆசையை விட்டுவிடு. 2. என்னை பின்பற்றி வா என்று இரண்டு காரியங்களை அவனிடம் கூறினார். ஒருவன் சன்மார்க்கமான வழியிலே வாழ்வது அவன் மனதுக்கு சுயதிருப்தியை கொடுக்கலாம், அதனால் அவன் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியாது. அந்த வாலிபனுக்கோ உலக ஐசுவரியத்தின் பற்றை விட்டுவிட முடியவில்லை. ஆனால் அவன் சன்மார்க்கனாக வாழ்ந்தாலும் தன் வாழ்வில் குறையிருப்பதை உணர்ந்து கொண்டான். அதுபோலவே இன்று பல மனிதர்கள் இந்த உலகிலே சன்மார்க்கமான வழியிலே வாழ்ந்தாலும், இந்த உலகத்திற்குரிய ஏதோ ஒரு காரியம் அவர்கள் வாழ்க்கையை மேற்கொண்டிருக்கின்றது. அது மாம்சத்தின் இச்சையாகவோ, கண்களின் இச்சையாகவோ அல்லது ஜீவனத்தின் பெருமையாகவோ இருக்கலாம். வேறு சிலர் உலக ஆசைகளை துறந்து துறவிகளாக வாழ தங்கள் சொந்த பெலத்தினால் முயற்ச்சிக்கின்றார்கள். அதனால் நித்திய ஜீவனுக்குரிய வழியை கண்டடையலாம் என்று பிரயாசப்படுகின்றார்கள். ஆனால் ஒருவன் இயேசுவை பின்பற்ற மனதில்லாதவனாக இருப்பான் என்றால், அவன் பிதாவாகிய தேவனிடத்திற்கு வர முடியாது, இயேசு கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் பரலோக சுதந்திரமாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியாதென்பதை உணர முடியாமல் அவர்கள் மனக் கண்கள் இருளடைந்திருக்கின்றது. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு கூறியிருக்கின்றார். எனவே நாம் அவரைப் பின்பற்றி வாழும் போது, இந்த உலக ஆசைகளை துறந்து, நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

**யோவான் 15:5**

**ஆண்டவர் இயேசு: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**ஜெபம்**: பிதாவாகிய தேவனே, பரலோகம் வந்தடைவதற்கு நீர் அமைத்திருக்கும் ஒரே வழியாகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றி, அவர் காட்டிய வழியிலே வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| செவ்வாய் \| வைகாசி 4 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 27:39 – 43 |
|---|---|

# ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும்?

ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று மத அதிகாரி ஒருவன் ஆண்டவராகிய இயேசுவிடம் கேட்டான். மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன? ஏன் ஒவ்வொரு மனிதனும் மறுபடியும் பிறக்க வேண்டும்? மனித குலத்தின் முதல் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும் தேவ சாயலுடையவர்களாய் சிருஷ்டிக்கப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையை மீறி வஞ்சிக்கும் பிசாசானவனின் வார்த்தைக்கு கீழ்படிந்ததால்: 1. அவர்கள் தேவ சாயலை இழந்து போனார்கள் 2. பாவவித்து அவர்களுக்குள் விதைக்கப்பட்து. 3. அதனால் நித்திய மரணத்திற்கு உட்பட்டவர்களானார்கள். அவர்கள் வழியாக வந்த நம் யாவருக்குள்ளும் அந்த பாவ வித்து பிறப்பிலேயே இருக்கின்றது. எந்த மனித முயற்சியினாலும் அந்த பாவ வித்தை அகற்றிவிட முடியாது. எனவே மனித குலத்தின் முடிவு நித்திய மரணமாகவே இருந்தது. ஆனால் அன்புள்ள பிதாவாகிய தேவன் தாமே, மனித குலத்தை அந்த நித்திய மரணத்திலிருந்து மீட்கும்படிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுவை, மனித குலத்தின் பாவத்திற்கு பரிகாரமாக அனுப்பினார். இயேசு பாவத்தின் பரிகாரத்தை சிலுவை மரணத்தின் வழியாக கொடுத்து தீர்த்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார். அதனால் ஆண்டவராகிய இயேசுவே மனித குலம் மீட்படையும் நாமகாரணரானார். ஒருவன், ஆண்டவராகிய இயேசுவை, தன் இருதயத்தில் விசுவாசித்து, அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தன் வாழ்வை அவருக்கு ஒப்படைக்கும் போது அவன் மறுபடியும் பிறக்கின்றான். இந்த இரட்சிப்பின் வழியாக தேவனுடைய பரிசுத்த வித்து அவனுக்குள் உண்டாக்கப்படுகின்றது. இவ்வண்ணமாக அவன் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக மறுபடியும் பிறந்த குழந்தையைப் போல ஆகுகின்றான். இனி அவன் தன் பழைய பாவ வித்தின் ஜென்ம சுபாவத்திற்கு உட்பட்டவனாக இருக்கத் தேவையில்லை. அவன் தொடர்ந்து தன் வாழ்வை ஆண்டவராகிய இயேசு காட்டிய வழியிலே வாழும் போது, நாளுக்கு நாள் தேவ சாயலிலே வளர்ச்சியடைந்து முடிவிலே பரலோகத்திலே நீடுழியாய் வாழ்வான்.

**1 பேதுரு 1:23**

அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாதவித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

**ஜெபம்:** மறுபடி பிறக்கச் செய்த தேவனே, இனி நான் என் வாழ்வில் ஜென்ம சுபாவத்திற்கு அடிமையாக இராமல், கிறிஸ்துவின் சாயலிலே நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும்படி என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்

**1 கொரிந்தியர் 14:20**

**சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள். துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்.**

“குழந்தையைப் போல” கபடமற்ற இருதயமுடையவனாக இரு;ஆனால் “குழந்தைத்தனம்” உடையவனாக இராதே என்று ஒரு வயதான தேவ ஊழியர் ஒரு வாலிபனுக்கு அறிவுரை கூறினார். பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாக இருக்கும்போது, தங்கள் பெற்றோரிடம் இருக்கும் வெளித்தோற்றம், அவர்களிடமிருக்கும் ஐசுவரியம், அவர்களின் சமுக அந்தஸ்து, அவர்களின் கல்வி அறிவைப் பார்த்து அவர்களை பற்றிக் கொள்வதில்லை. மாறாக எந்த நிபந்தனையுமின்றி பெற்றோரை மனதார பற்றிக் கொள்கின்றார்கள். பெற்றோரையே நம்பி வாழ்கின்றார்கள். துர்ச்செய்கைளை நடப்பிக்கும் துர்க்குணம் அவர்களிடம் இருக்காது. அவர்கள் உலக அதிகாரங்களை குறித்த ஆசை அவர்களிடம் இல்லை. அவர்களிடத்தில் வேற்றுமைகள் இருப்பதில்லை. இவ்வண்ணமாக, சிறு பிள்ளைகளைப் போல நாம் நம்முடைய பிதாவாகிய தேவனை பற்றிக் கொள்ளுவதையே தேவன் விரும்புகின்றார். அதே வேளையிலே, குழந்தையானது, எந்த ஒரு காரியத்தையும் அழுது சாதித்துக் கொள்ளும். காண்பவைகள் எல்லாவற்றையும் தன் கைகளிலே எடுத்து தன் வாய்குள் போட்டுக் கொள்ளும். தான் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்று அழும். ஊட்டச் சத்துள்ள உணவுகளை உண்பதை விரும்புவதில்லை. வீட்டைவிட்டு பாடசாலைக்கு சென்று கற்க விரும்பாது. தன் சூழ்நிலைகளானதுமாற்றமடைந்தால் அழுது கொண்டே இருக்கும். இவ்வண்ணமாக, ஒரு குழந்தையானது, குழந்தையாக இருக்கும் போது குழந்தைத்தனமுள்ளதாகவே இருக்கும். அதைக் குறித்து எவரும் தவறாக எண்ணிக் கொள்வதுமில்லை, பேசிக் கொள்வதுமில்லை. அதே போல நாம் கிறிஸ்தவர்களாக மறுபடியும் பிறக்கும் போது, புதிதாய் பிறந்த குழந்தையானது, பெற்றோரைப் பற்றிக்கொள்வதைப் போல நாம் நம்முடைய பிதாவாகிய தேவனை பற்றிக் கொள்ள வேண்டும். புதிதாய் பிறந்த குழந்தைகளுக்கு இருப்பது போல, குழந்தைத்தனமான சில சுபாவங்களும் நம்மிடம் உண்டாயிருக்கலாம். அவைகளைவிட்டு நாம் தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருக வேண்டும். குழந்தைகளிடம் துர்க்குணம் இருக்காது, எனவே அதிலே நாம் எப்போதும் குழந்தைகளாகவேயிருந்து, தேவனை அறிகின்ற அறிவிலே நாம் வளர்ந்து பெருகின்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

**ஜெபம்:** பரலோக தகப்பனே, துர்க்குணத்திலே குழந்தைகளாவும், உம்மை பற்றிக் கொள்ளுவதிலே கபடற்ற இருதயமுள்ள பிள்ளைகளைப் போலும் இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தந்தையை அறிகின்ற அறிவு

"ஒரு சிறு பிள்ளையானவன், அவனுடைய தகப்பன் காலையிலே வேலைக்குச் சென்றவுடன், எனக்கு அப்பா வேணும் என்று அழுது கொண்டே இருந்தான். மாலையிலே தகப்பன் வந்ததும், அவரை இறுகக் கட்டியணைத்து, என்னைவிட்டு போக வேண்டாம் என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். இவ்வண்ணமாக அடுத்த நாளும் அவன் அழுது கொண்டேயிருந்தான்.ஆனால் நாட்கள் கடந்து சென்று அவன் காரியங்களை அறிந்து கொள்ளும் அறிவை அடைந்த போது, "என் அப்பா, எங்கள் வாழ்வாதாரத்திற்காக பணம் சம்பாதிக்கும்படி சென்றிருக்கின்றார், மாலையிலே அவர் என்னிடம் வந்து விடுவார்" என்று கூறிக் கொள்வான். அவன் பாலர் பாடசாலைக்கு செல்லும் நாள் வந்த போது, முதல் நாள் பாடசாலை வாசலிலே தன் தாயாரை இறுகக் கட்டியணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். வகுப்பில் தன் தாயாரை தன்னுடன் இருக்கும்படி வேண்டிக் கொண்டான். நாட்கள் கடந்து சென்று அறிவிலே அவன் வளர்ந்த போது, பாடசாலை முடிந்த பின், என் தாயார் வந்து என்னை கூட்டிக் கொண்டு செல்வார் என்ற உறுதி அவன் மனதிலே உண்டானது. பிரியமானவர்களே, இவ்வண்ணமாகவே நாமும் கிறிஸ்துவுக்குள் புதியதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல இருக்கின்றோம். ஆரம்பத்திலே சின்னக் காரியங்களைக் கண்டுகூட பயந்து நடுங்கி விடுகின்றோம். தேவன் என்னைக் கைவிட்டாரோ? அவர் என்னை மறந்தாரோ? என் தேவன் எங்கே என்று மனிதிலே எண்ணிக் கொள்வோம். நாட்கள் சென்று தேவனை அறிகின்ற அறிவிலே வளரும் போது, நாம் தேவ பிள்ளைகளாக மாற்றப்படுகின்றோம். வாழ்விலே கடும் புயல் போன்ற சாவால்கள் வந்தாலும், பயங்கரங்கள் சூழ்ந்து கொண்டாலும், கஷ்டங்கள் அழுத்தினாலும், என்னுடைய பிதா வாகிய தேவன் எங்களை ஒரு போதும் மறந்து போக மாட்டார். அவர் எங்களை கைவிட மாட்டார் என்னும் நிச்சயத்திலே உறுதியாய் தரித்து நிற்கின்றவர்களாகின்றோம். இப்படியாக நாம் பிதாவாகிய தேவனுக்குப் பிரியமான குமாரர்களும், குமாரத்திகளுமாக எப்போதும் விசுவாசத்திலே உறுதியாய் தரித்திருப்போம்.

**1 கொரிந்தியர் 13:11**

நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன் நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

**ஜெபம்**: சதா காலமும் என்றென்றும் எங்களோடு இருக்கும் தேவனே, மகிமையிலே உம்மோடு சேரும் நாள் வரைக்கும் உம்மைப்பற்றும் விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்க பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வெள்ளி \| வைகாசி 7 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 18:3 |
|---|---|

# நிறைவான வளர்ச்சி

இரண்டு இளைஞர்களுக்கிடையிலே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், தர்க்கமாக மாறி சண்டை செய்யும் அளவிற்கு போய்விட்டது. அந்த வேளையிலே, "நீ இன்னாருடைய மகன் அல்லவா? நீ ஆண் சிங்கம் அல்லவா? நீ யார் என்பதை அவர்களுக்கு காட்டு" என்று அந்த இளை ஞர்களில் ஒருவனுக்கு அவனின் உறவினர்களில் ஒருவர் உற்சாக ப்படுத்தினார். அந்த குறிப்பிட்ட இளைஞன் உண்மையிலே, அவன் தன் தந்தையைப் போல பெலசாலியும், திடகாத்திரமுள்ள சரீர வளர்ச்சியுடை யவனாக இருந்தான். இப்படிப்பட்ட சூழ் நிலையிலே அவன் தன் உறவி னரின் சொல்லைக் கேட்டு, தன் தந்தைசெய்வது போல,மற்றய இளை ஞனை அடித்துப் போடுவானாக இரு ந்தால், அவன் தன் மாம்ச இச்சைக்கு உட்பட்டவனாக இருப்பான். இப்படி யாக பல மனிதர்கள், சரீர பெலன், அதிகாரங்கள், சமுக அந்தஸ்துக் கள், கல்வி அறிவு, ஐசுவரியம் போன்ற உலகத்தினால் உண்டான பெரு மைகளினால் தங்கள் நாளாந்த வாழ்க்கையின் போராட்டங்களை ஜெயி க்க முற்படுகின்றார்கள். இது மனிதனுடைய பூரண வளர்ச்சி அல்ல. இவை இந்த உலகத்தினால் உண்டானவைகள். மீட்பராகிய இயேசுவை கைது செய்யும்படியாக, யூத மத அதிகாரிகள் வந்தபோது, அவருடைய சீஷர்களில் ஒருவன், தன்னிடமாய் ஒளித்து வைத்திருந்த வாளை எடு த்து, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட் டினான். அப்பொழுது இயேசு: அவனுடைய காதைத் தொட்டு, அவ னைச் சொஸ்தப்படுத்தினார். பின்பு தன் சீஷனை நோக்கி: நான் இப் பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டா ரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறை வேறும் என்றார். அவர் தேவனுடைய குமாரனாக இருந்த போதிலும், தம்மை பிடி க்க வந்தவர்களை அழித்துப் போடவில்லை. மாறாக, தம்முடைய பிதா வாகிய தேவனுடைய திருச்சித்தம் தன் வாழ்வில் நிறைவேற வேண்டும் என்று மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தி, பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை நிறை வேற்றி முடித்தார். இவ்வண்ணமாகவே பிதாவா கிய தேவனுடைய திருச்சித்தத்தை தன் வாழ்வில் நிவைவேற்றி முடிப் பதே ஒரு தேவ மனிதனுடைய பூரணமான வளர்ச்சியாயிருக்கின்றது.

**எபேசியர் 4:11**

**கிறிஸ்துவினுடைய நிறை வான வளர்ச்சியின் அளவு க்குத்தக்க பூரண புருஷரா கும்வரைக்கும்,**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, இந்த உலகத்தின் போக்கின்படி நான் என் வாழ்க்கையை வாழாமல், இயேசுவைப் போல உம்முடைய பூரணமான திருச்சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுத்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவிக்குரிய வளர்ச்சியின் முடிவு

பாடசாலையில் படிக்கின்றவர்கள் பன்னிரண்டாம் வகுப்புடன் உயர்தர படிப்பை முடித்து, பல்கலைக் கழகத்திற்கு செல்கின்றார்கள். அங்கே குறிப்பிட்ட ஆண்டுகளுடன் தங்கள் பட்டப்படிப்பை முடித்துக் கொள்கின்றார்கள். கர்த்தருக்குள் புது சிருஷ்டியாக மறுபடியும் பிறந்த நாம், எத்தனை ஆண்டுகளாக நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலிலே வளர வேண்டும்? மனிதனுடைய வாழ்நாட்களிலே தேவ சாயலிலே மறுரூபமாவற்கு ஒருஎல்லைஉண்டோ? அதாவது "இப்படிப்பட்ட விரதங்களை குறிப்பிடப்பட்ட ஆண்டுகளுக்கு செய்தால் நாம் புனிதராகிவிடலாம்" "இந்த புனித ஸ்தலத்திற்கு சென்று வந்தால் போதும், நாம்மோட்சம் சென்றுவிடலாம்" என்று சில மனிதர்கள் கூறிக்கொள்வார்கள்.

**1 பேதுரு 5:8**

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்**

ஒரு மனிதனானவன் தன் வாழ்க்கைவட்டத்திலே குழந்தைப் பருவம், சிறுபிராயம், வாலிப நாட்கள், பெரியவர்களாகுதல், வயோதிபம் போன்ற கட்டங்களை தன் வாழ்விலே ஒருமுறை மட்டுமே கடந்து செல்கின்றான். அதாவது ஒருவனுக்கு வாலிப நாட்கள் வசந்தமாக இருக்கலாம். அந்நாட்களிலே அவனுக்கு பல அபிலாஷைகளும், திட்டங்களும் இருக்கும். அவன் பெரியவனாகும் போது அந்த பருவம் அவனை எப்படி சந்திக்கும் என்பதைக் குறித்த நிச்சயம் என்ன? வயோதிபம் எப்படியாக அவனைப் பற்றிக் கொள்ளும் என்ற முன்னனுபவம் அவனுக்கில்லை. மரணம் எப்படியாக அவனை சந்திக்கும் என்று அவனுக்குத் தெரியாது. எனவே நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும், ஒவ்வொரு நாட்களிலும் தேவனுடைய வழிடத்துதல் நமக்கு இன்றியமையாதது. நாற்பது ஆண்டுகளாக வேதத்தை வாசித்தேன், அனுதினமும் ஜெபித்து வந்தேன், தற்போது எனக்கு எழுபது வயதாகிவிட்டது, இனி எனக்கு அவைகள் தேவையில்லை என்று ஒரு மனிதன் கூறிக் கொள்ள முடியுமோ? அவன் அப்படி விட்டுவிடுவானானால், வஞ்சிக்கும் பிசாசானவன் அவன் வாழ்க்கையை இலகுவாக மேற்கொண்டு விடுவான். பிரியமானவர்களே, நாம் யாராக இருந்தாலும், நாளைய நாள் நம்மை எப்படி சந்திக்கும் என்கின்ற நிச்சயம் நமக்கு இல்லை. எனவே காலத்தை அறிந்த கர்த்தரோடுள்ள உறவிலே நாம் எப்பொழுதும் வளர்ந்து பெருக வேண்டும். அவருடைய திருவசனமே நம்முடைய வாழ்வின் தீபமாக இருக்கின்றது. அந்த தீபத்தை நாம் ஒரு கணம்கூட அணைத்துப் போடக்கூடாது. எல்லா பருவங்களிலும், தெளிந்த புத்தியுள்ளவர்களாக விழித்திருந்து, தேவ சாயலிலே வளர்ந்து பெருக வேண்டும்.

**ஜெபம்:** ஒரு போதும் கைவிடாத தேவனே, நாளைய நாள் எப்படியாக என்னை சந்திக்கும் என்பதை அறிந்தவரே, உம் வார்த்தையை தினமும் தியானம் செய்து தெளிந்த புத்தியுள்ளவனா(ளா)க இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | வைகாசி 9 | 📖 மாலை வாசகம் – எசேக்கியல் 33:31

# தேவனுக்கு பிரியமான ஆராதனை

"இன்று துதி ஆராதனை நன்றாக இருந்தது" என்று விசுவாசிகள் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். தேவனுக்கு ஏறெடுக்கும் துதிகள் நன்றாக இருந்தது என்று கூறுவதற்குரிய அளவுகோல் எது? அநேக வாத்தியக் கருவிகளை மிகவும் நேர்த்தியாக மீட்டினால் துதி நன்றாக மாறிவிடுமோ? இனிமையான குரலிலே பாடல்களை பாடுவதால் துதி நன்றாக இருக்குமோ? அநேக ஜனங்கள் இன்ரநெற் ஊடகங்களின் ஊடாக தங்கள் விருப்பத்தை (like) தெரிவிப்பதால் துதி நன்றாக இருக்குமோ? வாத்தியக் கருவிகளை நேர்த்தியாக வாசிப்பது நல்லது. இனிமையான குரலிலே துதி பாடல்களை பாடுவது நல்லது. ஆனால் அவைகள் மனிதர்களுடைய மனதிற்கு ஏற்புடையதாகவும், விரும்பத்தக்கதாகவும் இருப்பதால், அந்த துதியானது தேவனுக்கு உகந்த வாசனையாக இருக்கும் என்று நாம் கூறிவிட முடியாது. பொதுவாக மனிதர்கள் தங்கள் உணர்வுகளின்படி தங்கள் கருத்துக்களை தெரிவிக்கின்றார்கள். சபை நடுவே ஜனங்களோடு நின்று துதிக்கும் வேளையிலே, பலர் பலவிதமாக துதிக்கலாம் அல்லது துதிக்காமல் இருக்கலாம். நாம் மற்றவர்களைக் குறித்து நிதானித்தறியாமல், நாம் முழுமனதோடு தேவனைத் துதிக்க வேண்டும். தேவனாகிய கர்த்தர் இருதயங்களை ஆராய்ந்து அறிகின்றார். தேவனுக்கேற்ற பலி எது? எங்கள் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலிகளே தேவனுக்கு உகந்த வாசனையாக இருக்க வேண்டும் என்றால், எங்கள் இருதயம் அவருக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும். தம்முடைய வார்த்தைக்கு கீழ்படிகின்றவர்கள், ஏழைக் குடிலிலே தனித்திருந்து துதியை செலுத்தினாலும், அந்த துதியில் தேவன் பிரியப்படுகின்றவராயிருக்கின்றார். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது." என்று தம்முடைய தீர்க்கதரிசி வழியாக தம்முடைய ஜனத்தை குறித்து தேவன் கூறியிருக்கின்றார். நாம் விசுவாசத்தோடு, ஆபேலைப் போல தேவனுக்கு பிரியமான மேன்மையான பலியை ஏறெடுக்க வேண்டும். நம்முடைய துதி ஆராதனையானது தேவனுக்கு ஏற்புடையதாக இருப்பதே மிகவும் அவசியமானது.

**சங்கீதம் 86:12**

**என் தேவனாகிய ஆண்டவரே, உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்.**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானங்களும் உமது சமுகத்திலே பிரியமானதாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு

"யாரையும் குறித்து பேசு ஆனால் என் தாயை குறித்து மட்டும் ஏதாவது பேசுவாயாக இருந்தால், நான் யார் என்பதை அறிந்து கொள்வாய்" என்று தங்கள் சுய கொள்கைகளை கூறும் மனிதர்களை குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த உலகிலே, இத்தகைய வார்த்தைகளை கூறும் போது, இது தாய்ப்பாசம்! அவன் யார் பிள்ளை என்றாலும் ஆண்பிள்ளை என்று பலர் கரகோசத்தோடு தங்கள் பாரட்டுக்களை வெளிப்படுத்துவார்கள். இன்று, தேவ சாயலடையும்படி அழைப்பைப் பெற்ற சில தேவபிள்ளைகள் கூட, எல்லாவற்றையும் தேவனை அறிகின்ற அறிவில் வளரும்படிக்கு விட்டுவிட்டாலும், வாழ்க்கையின் ஏதோ ஒரு பகுதியில் இத்தகைய சில சுயகொள்கைளை தங்களுக்கென்றுவைத்துக் கொள்கின்றார்கள். இவ்வண்ணமாக சுயகொள்கைகளை அறிக்கை செய்யும் தேவபிள்ளைகள் தங்கள் பெலவீனமான பகுதியை பொல்லாங்கனாகிய பிசாசானவனுக்கு தெரியப்படுத்துகின்றார்கள். அந்த பெலவீனமான பகுதியிலே, சோதனை வரும் போது, அவர்கள் வேத வார்த்தையை பின்பற்றாதபடிக்கு அவர்களின் தனிப்பட்ட கொள்கைகள் அவர்கள் மனக்கண்களை இருளடையச் செய்து விடுகின்றது. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். அதாவது, இந்த உலகிலுள்ள மனிதர்கள் நமக்கு சொற்களால் மனவேதனைகளை உண்டாக்கலாம் அல்லது செயலால் நமக்கு கோபமூட்டலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளே நமக்கு துன்பமான சூழ்நிலைகள் நம்முடைய தேவ பக்தி எவ்வளவு உறுதியானது என்பதை இவ்வாறான சூழ்நிலைகளே பரீட்சை பார்க்கும். ஒரு மனிதன் நம்மை குற்றப்படுத்தும்படிக்கு ஒரு வார்த்தையை கூறினால், அவன் நம் வாழ்க்கையை குறித்து கூறிய வார்த்தையில் ஏதாவது உண்மை இருக்கி ன்றதா என்பதை வேத வார்த்தைகளின் வெளிச்சத்தில் நாம் ஆராய்ந்து பாரக்க வேண்டும். குற்றமிருக்குமாயின், "அதை கூறுவதற்கு அவன் யார்? அவன் செய்யாததையா நான் செய்து விட்டேன்" என்று கூறாமல், வேத வார்த்தைகளின்படி அதை நாம் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த மனிதன் கூறியவற்றில் உண்மையில்லையென்றால், தேவனுக்கு முன்பாக நாம் குற்றமற்றவர்களாக இருப்போம். அந்த மனிதன் கோள் கூறி சண்டையை பிணைக்கின்றவனாக இருந்தால் அவன் தன்னுடைய விழுகைக் கென்றே அதை நடப்பிக்கின்றான். அவன் மனந்திரும்பாத பட்சத்தில் அதன் பின்விளைவை அவனே அறுவடை செய்வான்.

**சங்கீதம் 37:8**

பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.

**ஜெபம்**: நீடிய பொறுமையுள்ள தேவனே, என் சொந்த கொள்கைகளுக்கு இடங் கொடாமல், தீமையை நன்மையினாலே வெல்லும்படிக்கு, ஞானமுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்களே பரீட்சித்துப்பாருங்கள்

வீட்டிலே, தாய் தந்தையருக்கு பிரியமான ஒரு பிள்ளையாக இருந்து வந்த சிறு பையன் ஒருவன், பாலர் பாடசாலைக்கு செல்ல வேண்டிய நாள் வந்தது. அவன் பாடசாலைக்குச் சென்ற நாள்முதல், பாடசாலை யின் வகுப்பாசிரியர் அவனைக் குறித்த சில முறைப்பாடுகளை பெற் றோரிடம் கூறினார். பெற்றோருக்கு அதை நம்ப முடியவில்லை. இவன் அருமையான பிள்ளை, வீட்டிலே எந்தவிதமான பிரச்சனைகளையும் கொடுப்பதில்லை. இவனல்ல, வகு ப்பாசிரியரும் மற்றய மாணவர்க ளுமே இவனைக் குழப்புகின்றார்கள் என்று பெற்றோர் சற்று கோபமடை ந்தார்கள். அந்த சிறு பையனின் பாட்டானார் பெற்றோரை நோக்கி: இவன் நல்ல பிள்ளைதான் ஆனால் இந்த வீட்டிலே அவன் தனிப்பிள் ளையாக இருப்பதனால் அநேகமான காரியங்கள் அவனுடைய இஷ்ட ப்படி நடக்கின்றது. எங்களுக்கு இவன் செல்லப்பிள்ளையாக இருப்ப தால், இவனோடு செல்லமாக பேசி வருகின்றோம். பாடசாலைக்கு செல் லும் போது, இவன் இன்னுமொரு அதிகாரத்திற்கு உட்பட்டவனாக இரு க்கின்றான். மற்றய மாணவர்கள் சரியாக அல்லது பிழையாக இருக் கலாம் ஆனால் இவனுடைய இஷ்டப்படி காரியங்கள் நடைபெறப் போவ தில்லை. முதலாவதாக பெற்றோராகிய நீங்கள் இந்த அறிவிலே வளர வேண்டும். பின்பு, உங்கள் மகனையும் அந்த அறிவிலே வளரும்படி இடங்கொடுக்க வேண்டும். ஒரு பிள்ளையானவன், பலரோடு சேரும் போதுதான், சூழ்நிலைகள் வழியாக அவனுடைய சுபாவங்கள் என்ன என்பதை அறிந்து அதன்படி நாங்கள் நற்பண்புகளை அவனுக்கு கற்றுக் கொடுக்க முடியும் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, நாமும் சபை ஐக்கியத்திலே இணைந்து கொள்ளும் போது, வேத வார் த்தைகளின் வெளிச்சத்திலே, நாம் யார் என்பதை, நாமே அறிந்து கொள் வோம். வீட்டிலே நடக்கும் காரியங்களை மையமாக வைத்து, நாம் அன்பு நிறைந்தவர்கள், ஒற்றுமையானவர்கள், கீழ்படிவுள்ளவர்கள் என்று சிலர் தங்களை குறித்து கருதிக் கொள்ளலாம். ஆனால் நாம் பிறனை அன்பு செய்கின்றோமா? மற்றவர்களோடு ஒற்றுமையாக இருக்கின் றோமா? அதிகாரங்களுக்கு கீழ்படிய ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின் றோமா என்பதை சபை ஐக்கியத்தின் சூழ்நிலைகள் நமக்கு வெளிப்ப டுத்தும். கிறிஸ்து எனக்குள் வாசமாயிருக்கின்றாரா? அப்படி அவர் எனக் குள் இருந்தால், அவருடைய சுபாவங்கள் என்னில் வெளிப்படுகின்றதா? என் பதைக் குறித்து நீங்களே உங்களை சோதித்து அறியுங்கள்.

**2 கொரிந்தியர் 13:5**

**உங்களை நீங்களே பரீட்சி த்துப்பாருங்கள்.**

**ஜெபம்**: என் உள்ளத்தின் நினைவுகளை அறிந்த தேவனே, எல்லா சூழ்நி லைகளிலும் உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நான் என்னை நிதானித்தறிந்து உமக்கு பிரியமான வழியிலே நடக்க கிருபை செய்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | வைகாசி 12

📖 மாலை வாசகம் – 1 யோவான் 4:10

# இயேசுவை அறிந்தவன் யார்?

“நான் இயேசுவை நேசிக்கின்றேன், அவரை நம்புகின்றேன் ஆனால் சபை ஐக்கியத்திலுள்ளவர்களை எனக்குப் பிடிக்காது” என்று சில மனிதர்கள் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். இத்தகைய அறிக்கை கேட்பதற்கு சரியானது போல தோன்றலாம் ஆனால் இவர்கள் ஆண்டவராகிய இயேசுவை அறிய வேண்டிய பிரகாரமாக இன்னும் அறியவில்லை என்பதே பொருளாகும். ஒருவன் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் அன்பு கூருகின்றான் என்பது எதினால் விளங்கும்? “நீங்கள் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். (யோவான் *15:10,12*). தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம். (*1* யோவான் *4:20-21*). உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீகப் பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள். (யாக்கோபு *2:8*). சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது, வேதப்புரட்டனாயாவது இருந்தால் அவனைவிட்டு விலகி இருக்க வேண்டும். (*1* கொரி *5:11*, தீத்து *3:10*). அப்படிப்பட்டவனுடைய கிரியைகளுக்கு நாம் உடன்பட்டவர்கள் அல்லர். ஆனால் அப்படிப்பட்டவனையும் நாம் வெறுத்து தள்ளிவிடக்கூடாது. சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன். (யாக்கோபு *5:19-20*).

**யோவான் 15:12**

**நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நான் நிர்மூலமாகாதிருப்பது உம்முடைய கிருபை என்பதை உணர்ந்தவனா(ளா)ய், மற்றய சகோதர சகோதரிகளின் இரட்சிப்புக்காக ஜெபிக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எல்லாத் தீமையினின்றும் இரட்சிப்பார்

"என்னுடைய எதிரிகள் எனக்கு எதிர்த்து நிற்பார்கள் என்பதைக் குறித்து எனக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை. ஆனால் நான் அநேக ஆண்டுகளாக நம்பியிருந்த என் உடன் சகோதரர்கள் எனக்கேற்பட்ட உபத்திரவத்திலே எனக்கு மோசம் செய்துவிட்டார்கள். அவர்கள் அப் படிச் செய்வார்கள் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை." என்று தேவனை அறிந்த மனிதனொருவன் தன் போதகரிடம் தன் மனவேதனை யை தெரியப்படுத்தினான். இப்படிப் பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதில் லை என்று நாம் கூறுவோமாக இரு ந்தால் நாம் பொய்யர்களாக மாறி விடுவோம். ரோமருடைய ஆட்சிக் காலத்திலே, கிறிஸ்துவின் நற்செய் தியை அறிவித்தவர்கள் வெகுவாய் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். தேவ ஊழியராகிய பவுல் அவர்களில் ஒருவராக இருந்தார். ஒரு சமயம், ரோம அதிகாரிகளுக்கு உத்தரவு சொல்லும்படி பவுல் நிற்கையில், ஒருவனும் அவருக்கு உதவியாக நிற்கவில்லை. அதிகாரங்களுக்கு பயந்திருந்ததால் எல்லாரும் அவரை கைவிட்டார்கள். ஆனால் தேவ ஊழியராகிய பவுல், அந்த குற்றம் தன்னை கைவிட்டவர்கள் மேல் சுமராதபடிக்கு தேவனை வேண்டிக் கொண்டார். கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறத ற்காகவும், என்னைப் பலப்படுத்தினார் சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று தன்னுடைய சாட்சியை கூறினார். *(2 தீமோ 4:16-18)*. உங்கள் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்ப டலாம். அப்படி ஏற்படும்போது, அது மிகவும் மனவேதனையாய் இருக் கும். அந்த வேளையில், சிலுவையிலே தொங்கிய நம்முடைய ஆண் டவராகிய இயேசுவை கண்முன் கொண்டு வாருங்கள். அவர் தேற்று வார் யாருமின்றி பல பாடுகள் மத்தியிலும் எவரையுமே கடிந்து கொள் ளவில்லை. அதுபோலவே மனவேதனையான நேரங்களிலும் சகோதரர்க ளைக் குறித்த கசப்பை மனதில் வளர இடங்கொடுக்காதிருங்கள். ஆண் டவராகிய இயேசுவை போல மாறும்படிக்கே நாம் அழைக்கப்பட்டிருக்கி ன்றோம். இப்படிப்பட்ட பாடுகளை நமக்கு முன்பாக இருந்த, முன்னோ ர்கள் கிறிஸ்துவுக்காக சகித்துக் கொண்டார்கள். அவர்களுடனே இருந்த கர்த்தர் நம்மோடும் இருக்கின்றார். கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுகளை சகிப்போமாக.

**2 தீமோத்தேயு 4:18**

கர்த்தர் எல்லாத் தீமை யினின்றும் என்னை இர ட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்.

**ஜெபம்**: ஒரு போதும் கைவிடாத தேவனே, மனிதர்களால் கைவிடப்பட்ட சூழ்நிலைகள் உண்டானாலும், என் இருதயத்திலே கசப்பை வளர்க்காமல், இயேசுவைப் போல யாவருக்காகவும் விண்ணப்பம் செய்யும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வெள்ளி \| வைகாசி 14 | 📖 மாலை வாசகம் – யோசுவா 23:8 |
|---|---|

# கர்த்தரைப் பற்றிக்கொண்டிருங்கள்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய பலத்த கரத்தினாலே விடுதலையாக்கப்பட்டு, வாக்களிக்கப்பட்ட செழிப்புள்ள கானான் தேசத்திற்கு, தேவ ஊழியராகிய மோசே வழியாக வழிநடத்தப்பட்டார்கள். "நான் உங்களுக்கு கானான் தேசத்தைக் கொடுப்பேன்" என்று தேவன் வாக்குரைத்திருந்தும், தங்களுடைய எதிரிகளைக் கண்டபோது சோர்வடைந்தார்கள். தேவனே, எங்களைப் பெலப்படுத்தும், எங்களோடு இருக்கும் எங்கள் தேவன் எங்களை கைவிடமாட்டார் என்கிற விசுவாச வார்த்தைகளை கூறி தேவனிடத்திலே விண்ணப்பிப்பதற்குப் பதிலாக, நாங்கள் இந்த வனாந்திரத்திலே அழிந்து போகும்படிக்கு தேவன் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தார் என்று பலமுறை தங்கள் வாயினாலே அறிக்கையிட்டு, தேவனுக்கும், தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேக்கும் எதிராக முறுமுறுத்து, கலகம் பண்ணினார்கள். அதுமட்டுமல்லாது எகிப்திலே தாங்கள் விட்டுவந்த அருவருப்புக்களையும், தீட்டான ஆகாரங்களையும் இச்சித்தார்கள். வேறுபிரிக்கப்பட்ட இந்த தேவ ஜனங்களுடைய வாயின் அவிசுவாச அறிக்கைகளை சற்று சிந்தித்துப்பாருங்கள். பரிசுத்த வாழ்வு வாழும்படியாய் தேவனாகிய கர்த்தர் நம்மை இந்த உலகத்திலிருந்து வேறு பிரித்திருக்கின்றார். வனாந்திரம் போன்ற இந்த உலக வாழ்க்கையிலும் நம்மை நோக்கி உபத்திரவங்களும், சவால்களும், பயங்கரங்களும் வரும் போது நாம் எப்படியான காரியங்களை மனதிலே சிந்திக்கின்றோம் என்றும், வாயினாலே எதை அறிக்கை செய்கின்றோம் என்றும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தானியேலும், அவனுடைய நண்பர்களும், சுதந்திரவாளிகளாக வாழ்ந்து வந்த தங்கள் தேசத்திலிருந்து, அடிமைகளாக சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோன் தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், அவர்கள் பாபிலோனின் அருவருப்புகளை நோக்கிப் பார்க்காமலும், அந்த தேசத்தின் ராஜாவின் போஜன பதார்த்தங்களால் தங்களை தீட்டுப்படுத்தாமலும் இருந்தார்கள். தேவனுடைய நாமத்திற்காக மரிக்க வேண்டி நேர்ந்தாலும், வேறு எந்த சிலைகளையும் வணங்கமாட்டோம் என்று தேவனைக் குறித்து வைராக்கிய வாஞ்சையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்களைப் போல நாமும் எந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைபற்றிக் கொணடு அதிலே நிலைத்திருக்கக்கடவோம். வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

**எபிரெயர் 10:23**

**வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**

**ஜெபம்**: உண்மையுள்ள தேவனே, நீர் சொன்னதை செய்து முடிப்பவர் என்பதை நான் ஒரு போதும் மறந்து விடாமல், உம்முடைய நேரத்திற்காக பொறுமையுடன் காத்திருக்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையின் குறிக்கோள்

பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும் போது, தங்கள் தேவை எது, ஆசை எது, விருப்பம் எது என்பதை குறித்து சிந்திப்பதில்லை. அவர்கள் கண்கள் காண்பதெல்லாம் அவர்களுக்குத் தேவை என்றே எண்ணிக் கொள்வார்கள். மனிதனுடைய மனதிலே தோன்றுகின்ற ஆசைகள் எல்லாம் அவனுடைய தேவைகள் அல்ல. ஆனால் உலக போக்கிலே வாழ்பவர்கள், அந்த ஆசைகளுக்கு வேறு பெயரை சூட்டி அதை பின்தொடர்கின்றார்கள். அதாவது, "நான் பெரிய சொத்துக் காரனாக, ஐசுவரியவானாக வரவேண்டும்" என்பதை பொருள் ஆசை, பண ஆசை என்று கூறாமல், அது என்னுடைய வாழ்கையின் கனவு, திட்டம், குறிக்கோள் என்று அதை பின்தொடருகின்றார்கள். பின்தொடருகிறவர்களில் சிலர் அதைக் கண்டடைகின்றார்கள். அவைகளின் முடிவு என்ன? இஸ்ரவேலின் ராஜாக்களில் சாலமோன் என்னும் ராஜா ஐசுவரியவானும், ஞானியுமாக இருந்தார். அவர் தன் வாழ்வைக் குறித்து கூறியதாவது: "எனக்குமுன் எருசலேமிலிருந்த எல்லாரைப்பார்க்கிலும், பெரியவனும் திரவிய சம்பன்னனும், ஞானியுமாக இருந்த சாலமோன் தன் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் தன் கண்களுக்குத் தடைபண்ணவில்லை. அவர் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் அவர் வேண்டாமென்று விலக்கவில்லை" என்று தன் வாழ்க்கையின் அனுபவத்தை கூறியிருக்கின்றார். பின்பு அதன் முடிவு என்னவென்பதையும் கூறியிருக்கின்றார். அதவாது, "என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன் இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை." என்றார். அப்படியானால் மனிதனுடைய குறிக்கோள் என்ன? காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். அவைகளினாலே மனிதனுடைய மனம் ஒருபோதும் திருப்தியாவதில்லை. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். தேவ சித்தத்தை நிறைவேற்றுவதே நம்முடைய குறிக்கோள்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**ஜெபம்**: முடிவில்லா வாழ்வை பெறும்படி என்னை அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தையின் வழியிலே வாழ்வதன் பாக்கியத்தை உணர்ந்து கொள்ளும்படி உலகத்தினால் உண்டான இச்சைகளுக்கு தப்பி வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொருளாதார நெருக்கடி

தேசத்திலே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்ததால், மாதாந்தர ஊதியம் பெற்று வந்த ஒரு தகப்பனானவர், தன் வேலையை இழந்து போனார். பல இடங்களிலே வேலைக்காக விண்ணப்பித்திருந்தும், எல்லா கதவுகளும் அவருக்கு அடைபட்டிருந்தது. சில மாதங்கள் கடந்து சென்றதால் அவர் குடும்பம் பல கஷ்டங்களுக்கூடாகச் சென்று கொண்டிருந்தது. அந்த வேளை யிலே அவருடைய நிலையைக் கண்ட அயல்வாசி ஒருவன், நீ இந்த விண்ணப்பப்படிவத்தை நிர ப்பி, அரச இலாகாவிற்கு அனுப் பினால் உனக்கு அவர்கள் மாத ந்தோறும் பணம் கொடுப்பார்கள் என்று கூறினான். அந்த விண்ணப்ப பத்திரத்தை பார்த்த அந்த தக ப்பனானவர், இதில் கூறப்பட்ட நிபந்தனைகளின்படி நான் இந்த சலுகைக்கு தகுதியுடையவனில்லை என்று கூறினார். அதெல்லாம் ஒன் றுமில்லை, பணத்தை பெறுவதற்கு தகுதிபெறும்படி நீ அந்த விண்ண ப்பப்படிவத்தை அதற்கேற்ற பிரகாரம் மாற்றிவிடு என்று கூறினான். அதற்கு அந்த தகப்பனானவர்: நான் பொய்யான தகவல்களை போட்டு, பணத்தைப் பெற்று, உயிர்வாழ்வதைவிட, பட்டினியாய் இருந்து மரித்து நித்திய வாழ்வை அடைவதே எனக்கு மேலானது என்றார். அதற்கு அந்த அயல்வாசி: இந்த உலகத்திலே உனக்கு பிழைக்கத் தெரியாது என்று கூறி சென்றுவிட்டான். நீதிமானின் கைகள் சுத்தமுள்ளவைகள். அங்கே அநியாயமான ஆதாயத்திற்கு இடமில்லை. உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவர்கள் சுதந்தரம் என்றென் றைக்கும் இருக்கும். அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போகாதிருந்து, பஞ்சகாலத்திலே திருப்தியடைவார்கள். சில மனிதர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக பொய்களைக்கூறி, தங்கள் ஆத்துமாக்களைக் கெடுத்துக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, வேலைக்காரரின் கண் கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போல, நீதிமா னின் கண்களும் அவர்களுடைய பரலோக எஜமானனாகிய தேவனா கிய கர்த்தரையே நோக்கி இருக்கின்றது போல, உங்கள் நாட்களை அறிந்த தேவனையே நம்பியிருங்கள். அநியாயமான வழிகளுக்கு உடன் படாதிருங்கள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயி ருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்தி ருக்கிறது. கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பவர் தேவனே.

**நீதிமொழிகள் 21:6**

**பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடு கிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்.**

**ஜெபம்**: உத்தமர்களின் நாட்களை அறிந்த தேவனே, இந்த உலகத்தின் அற்பமான காரியங்களுக்காக, உம்முடைய நீதியைவிட்டு விலகிச் செல்லாதபடிக்கு, உம்மையே பற்றிக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் தேவையை அறிந்த தேவன்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவனுக்கு, செழிப்புள்ள தூர தேசத்திற்கு சென்று வேலை செய்யும்படியாக, அதற்குரிய ஆயத்தங் களை செய்யும்படிக்கு குறிப்பிட்ட ஸ்தாபனத்தை சேர்ந்த நிர்வாகிகள் அவனை அழைத்திருந்தார்கள். வெளிநாட்டிற்கு செல்வதற்குரிய ஆயத் தங்களை செய்வதற்கு பணம் தேவை, அநேக பொருட்களை வாங்க வேண்டும், விமான அனுமதிச் சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குழ ப்பமுடையவனாக இருந்தான். அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகி அவனை நோ க்கி: நீ ஏன் மிகவும் குழப்பமடைந்தி ருக்கின்றாய். உன் பிரயாணத்திற்குரிய ஆயத்தங்கள் யாவையும் நாங்கள் செய்திருக்கின்றோம். அங்கு உனக்கு தேவையாதெல்லாம் கொடுக்கப்படும். தற்போது அமைதலாக இருந்து, நாட்டின் சட்ட விரோதமான நடவடிக் கைகளிலே நீ சிக்கிக் கொள்ளாதபடிக்கு உன்னைக் காத்துக் கொள் என்று கூறினார். அந்த வாலிபன் மிகவும் சந்தோஷத்தோடே அதை ஏற்றுக் கொண்டு, அவனுடைய பிரயாண நாள் மட்டும் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாக வாழ்ந்து வந்தான். பிரியமானவர்களே, பரம தேசத்திற்கு செல்லும் அழைப்பை பெற்ற நமக்கு இந்த உலகிலே தேவைகள் உண்டு. நம்முடைய பரமபிதாவை நோக்கி நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே நமக்கு இன்னது தேவை என் பதை அவர் அறிந்திருக்கிறார். ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்ப டாதிருங்கள். அதாவது, எல்லாவற்றையும் தேவனாகிய கர்த்தர் பார் த்துக்கொள்வார் என்று நாம் சோம்பேறிகளாக இருக்கக்கூடாது. ஆனால் அவைகளே என் வாழ்வு, அவைகளே என் தேவை என்று அதற்காகவும் நாம் இந்த உலகத்தில் வாழ்ந்துவிடக்கூடாது. இவைகளையெல்லாம் தேவ ஞானம் இல்லாதவர்கள் நாடித்தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திரு க்கிறார். நாம் சென்றடைய வேண்டிய இடம் ஒன்று உண்டு. அது தேவனுடைய ராஜ்யம். நாம் உயிர் வாழும்வரை, அந்த ராஜ்யத்திற்கு ரியவைகளை நாடித் தேட வேண்டும். இந்த உலகத்தின் காரியங்களால் அந்த பிரயாணம் தடை படாதபடிக்கு நாம் எப்போதும் விழிப்புள்ளவர் களாக இருக்க வேண்டும்.

**மத்தேயு 6:8**

**உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள் ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்:** என் தேவை என்ன என்று அறிந்த தேவனே, இந்த உலகத்தின் ஆசைக்குள் நான் சிக்கி, நான் பெற்ற உன்னத அழைப்பை மறந்துவிடா தபடிக்கு, உணர்வுள்ள ஜீவியம் ஜீவிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவையான நல்ல பங்கு!

பட்டணத்திலே இயங்கி வந்த ஒரு சபை ஐக்கியத்திலே அநேக ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் கூடிவருவதற்கென நவீன வசதிகள் யாவுமுள்ள ஒரு கட்டிடம் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் கிழமைதோறும் கூடிவரும் போது, ஆராதனையின் முடிவில் தேநீர் சிற்றூண்டிகளை பரிமாறிக் கொள்வார்கள். வருடந்தோறும் கன்வென்ஷன், கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளையும், புறமனை ஐக்கியம் என்று பல விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்திக் கொள்வா ர்கள். ஆராதனை வேளையிலே அநேக இசைக்கருவிகளை நேர்த்தியாக வாசித்து இனிமையான பாடல்களைப் பாடுவார்கள். இவைகள் யாவும் நல்லது ஆனால் அங்கிருந்தவர்களில் ஒரு சிலர் மட்டுமே தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை தங்கள் வாழ்க்கையில் கைக்கொண்டு வந்தார்கள். பட்டணத்திற்கு தொலைவிலே இருந்த ஒரு சிறிய குக்கிராமத்திலே, ஒரு சிறிய கொட்டிலிலே இயங்கி வந்த ஏழ் மையான சபையொன்றிலே, பல விசுவாசிகள் வாரம்தோறும் கூடி தேவனை ஆராதித்து வந்தார்கள். பட்டணத்திலே இயங்கி வந்த சபையிலே நடந்து வரும் நிகழ்ச்சிகளைபோல நடத்துவதற்கு அவர்களிடம் எந்த வசதியும் இருந்ததில்லை. ஆனாலும் அவர்களில் சிலர் மட்டுமே தேவனுடைய வார்த்தையை கருத்தோடு கேட்டு, அதை தங்கள் வாழ்க்கையில் கைகொண்டு வந்தார்கள். இந்த இரண்டு சபைகளிலும் தேவனுடைய வார்த்தையை கேட்டு, அதன்படி செய்கின்றவர்களே, உலக காரியங்களினித்தம் கவலையடையாமலும் கலக்கமடையாமலும் தேவனைச் சார்ந்து வாழ்ந்தார்கள். ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு லாசரு என்னும் ஒரு மனிதனுடைய வீட்டிற்குச் சென்றிருந்தார். லாசருவுக்கு இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். அவர்களில் மரியாள் என்பவள், இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

**லூக்கா 10:42**

தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, எல்லா சூழ்நிலைகளிலும் உம்முடைய வார்த்தையை கேட்டு, அதன்படி நடப்பதையே என் வாழ்வின் கருப்பொருளாக கொண்டிருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | வைகாசி 19 📖 மாலை வாசகம் – ரோமர் 8:35 – 39

# கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயம்

ஒரு மனிதனானவன் மரணத்திற்கேதுவான வியாதி கொண்டவனாயிருந்தான். அவன் இந்த பூமியை விட்டுப் போக வேண்டிய நாட்கள் நெருங்கின வேளையிலே, அவனுக்கு ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிருபையாகக் கொடுக்கப்பட்டது. அதாவது, அவன் இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றாலும், பரலோகத்திலே முடிவில்லா வாழ்வை பெற்றுக் கொள்ளும் ஒரே வழியாக மீட்பராகிய இயேசு கிறிஸ்து இருக்கின்றார் என்ற மீட்பின் நற்செய்தி அவனுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த நிலையிலே அவனுக்கு இருக்கும் தெரிவுகள் என்ன? *1.* ஆண்டவராகிய இயேசுவை தன் சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்டு, ஆன்மீக மீட்பை பெற்று பரலோகிலே முடிவில்லா வாழ்வை பெற்றுக் கொள்ளலாம் *2.* ஆண்டவராகிய இயேசு வழியாக உண்டாகும் ஆன்மீக மீட்பை ஏற்றுக் கொள்ளாமல் நித்திய மரணத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கலாம். ஆனால் அவனோ, “இயேசு ஆண்டவராக இருந்தால் என்னை குணமாக்கட்டும், அப்போது அவரை நம்புவேன், அல்லது நான் நம்பமாட்டேன்” என்று தன் மனதை கடினப்படுத்திக் கொண்டான். அவன் தான் சென்றடையும் இடத்தை தானே நிர்ணயம் செய்து கொண்டான். இவ்வண்ணமாகவே, ஆண்டவராகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கும் போது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு குற்றவாளிகள் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். ஆண்டவராகிய இயேசுவோ, அந்த குற்றவாளிகளுடைய பாவங்களையும், மனிதகுலம் முழுவதின் பாவத்திற்குரிய பரிகாரத்திற்காகவும் தம்மை பலியாக ஒப்புக் கொடுத்து சிலுவையில் அறையப்பட்டிருந்தார். ஆனால் அந்த குற்றவாளிகளோ அவர்கள் நியாயப்படி தண்டிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் மரணத் தறுவாயில் ஆண்டவராகிய இயேசுவை அறியும் அரிய சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அவர்களில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். அப்படி அவரை இகழ்ந்து, தன் மனதை கடினப்படுத்தி, தான் சென்றடையும் இடத்தின் முடிவை அவன் தானே உறுதி செய்து கொண்டான். மற்றவனோ, இரட்சிப்பை பெற்றுக் கொண்டான். பிரியமானவர்களே, பாவத்திலிருந்து மனந்திரும்பும்படி கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படு த்திக் கொள்ளுங்கள். கர்த்தர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

**ஏசாயா 55:6**

**கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்**

**ஜெபம்**: என் வாழ்நாட்களை அறிந்த தேவனே, இந்த பூமியிலே நான் வாழும் நாட்களில், உம்மைக் கிட்டிச் சேர கிடைக்கும் சந்தர்ப்பங்களை அலட்சியம் பண்ணிவிடாதபடிக்கு என் மனக்கண்களை பிரகாசமுள்ளதாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிதாவின் சித்தம் நிறைவேறட்டும்

உங்கள் வாழ்க்கையிலே சில தெரிவுகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டால் எதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்பதைக் குறித்து ஆராய்ந்து பாருங்கள். 1. ஐசுவரியமுள்ளவர்களாக விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்வது, அல்லது கர்த்தருக்கு சித்தமானால், அவர் நாமத்தின் நிமித்தம் இந்த உலகிலே எளிமையாக வாழ்வது 2. சுகமாய் பல ஆண்டுகள் வாழ்வது, அல்லது கர்த்தருக்கு சித்தமானால், அவர் நாமத்தின் நிமித்தம் பாடுகளையும் உபத்திரவங்களையும் சகித்து இரத்தசாட்சியாக மரித்து, நித்திய மகிமையிலே பங்கடைவது. 3. திருமணமாகி, பிள்ளைகள் பெற்று, பேரப்பிள்ளைகளைக் கண்டு மரிப்பது அல்லது கர்த்தருக்கு சித்தமானால் தனியனாக வாழ்வது. அதாவது ஐசுவரியமுள்ளவர்களாய், சுகமாய், குடும்பமாக பல ஆண்டுகள் வாழ்வது மட்டுமே கர்த்தருடைய ஆசீர்வாதம் என்று சில மனிதர்கள் கருதுகின்றார்கள். தானியேல், பவுல் போன்ற தேவ பிள்ளைகள், பல சவால்கள் மத்தியிலே தனியாக வாழ்ந்து தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றினார்கள். ஸ்தேவான் என்னும் வாலிபன் தன் இளம் வயதிலேயே இரத்த சாட்சியாக மரித்தான். அவன் மட்டுமல்ல அந்நாட்களிலே அநேகர் அப்படியாக உபத்திரவத்திலும், வியாகுலத்திலும், துன்பத்திலும், பசியிலும், நிர்வாணத்தினாலும், நாசமோசத்திலும், பட்டயத்திலும் தேவ சேவை செய்து மரித்தார்கள். “என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்ப ண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா?” என்று பரிசுத்த வேதாகமத்திலே கூறப்பட்டிருக்கின்றது. கர்த்த ருக்குசித்தமானால் நீங்கள் கல்வி, ஐசுவரியம், அந்தஸ்துக்களுடன் செழிப்பாக வாழ்ந்து, பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை உங் கள் வாழ்வில் நிறைவேற்றுங்கள். ஒருவேளை நீங்கள் தரித்தரராகவே இருந்தால், ஐசுவரியத்தைக் குறித்து கவலையடையாமல் பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுங்கள். எனினும் ஐசுவரியவானாக வாழ்ந்து விசுவாசத்தைவிட்டு வழுவிப்போய் விடாமல், கர்த்தருக்கு சித்த மானால் தரித்திரனாக வாழ்ந்து பரலோகம் செல்வதே நன்மையானது. எனவே ஆண்டவர் இயேசுவைப் போல பிதாவின் சித்தத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**லூக்கா 22:42**

**என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவைப் போல, நான் எந்த சூழ்நிலையிலும் மனரம்மியமாக இருந்து உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதில் பிரகாசிக்கும் தீபம்

ஒரு இள வயதுள்ள மனிதனாவன், ஒரு குறிப்பிட்ட ஊரை நோக்கி, பயணம் செய்து கொண்டிருந்தான். தான் இன்ன ஊருக்கு போகின்றேன் என்பதை திட்டமாக அறிந்து, சாலையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தான். வழியிலே, இன்னும் சில மனிதர்கள் அந்த ஊருக்குச் சென்று கொண்டிருப்பதை அவன் கண்டு கொண்டான். இவன் இவ்வண்ணமாக நடந்துசென்று கொண்டிருக்கும்வேளையிலே, அவனோடு நடந்து செல்லும் இன்னுமொரு யாத்திரி அந்த இளவயதுள்ள மனிதனை நோக்கி: இந்தப் பாதை இன்ன ஊருக்கு போகின்றது. நீ உன் பாதையை மாற்றாமல் இதிலே சென்றால் அந்த ஊருக்கு சென்றடைவாய் என்று கூறினார். அதற்கு அவன் மறுமொழியாக: ஆம், நான் அந்த ஊருக்குத்தான் போகின்றேன் என்று கூறினான். இப்படியாக அவன் செல்லுகையில், இரண்டாவது மனிதனும் அவ் வண்ணமாக கூறினான். அதற்கு அவன் அப்படியே பதில் கூறினான். மூன்றாவதாக வந்த வயது சென்று ஒரு மனிதனும் அவ்வண்ணமாக அவனுக்கு கூறியபோது, அந்த இளவயதுள்ள மனிதன் சற்று சினமடைந்தவனாக, ஏன் இதை எனக்கு திரும்பத் திரும்ப கூறுகின்றீர்கள். நான் அந்த ஊருக்குத்தானே சென்று கொண்டிருக்கின்றேன் என்று சற்று கடுமையாகவே பதிலளித்தான். அதற்கு அந்த வயதானவர் அவனை நோக்கி: தம்பி, இப்போது பகல் நேரமாக இருக்கின்றது நீ தெளிவாக பார்க்கின்றாய், சீக்கிரத்திலே இருள் சூழ்ந்துவிடும், நீ நன்றாக பார்க்க முடியாத சூழ்நிலைகள் உண்டாகலாம். அதனால் நீ போகின்ற பாதை இதுதான் என்றும், இது சரியான பாதை என்றும் உன் மனதிலே உறுதி செய்துகொள் என்று கூறினார். பிரியமானவர்களே, நாங்கள் தந்திரமான கட்டுக் கதைகளைப் பின்பற்றுகிறவர்களாயிராமல் தேவனுடைய பரம அழைப்பிற்கு பங்காளிகளாக இருக்கின்றோம். நித்திய வாழ்வுக்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட நமக்கு தேவ வார்த்தையானது திரும்பத் திரும்ப கூறப்படும் போது, அதை அற்பமாக எடுத்துக் கொள்ளாமல் உறுதியாய் உங்கள் உள்ளத்திலே பதித்துக் கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசு, நம்மை அழைத்துச் செல்ல மறுபடியும் வருவார். எனவே அந்த நாளுக்கென ஆயத்த முள்ளவராக இருங்கள். இருள் சூழும் அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் போது, இந்த வார்த்தையானது உங்கள் மனதிலே ஒளிவீசும் தீபமாக இருக்கட்டும்.

**2 பேதுரு 1:10**

உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்

**ஜெபம்**: பரம அழைப்பிற்கு என்னை தெரிந்து கொண்ட தேவனே, நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும், ஒருபோதும் மறந்து விடாதபடிக்கு, எமக்கு நினைப்பூட்டி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தெய்வீக சுபாவமுள்ளவர்கள் யார்?

அந்த மனிதன் உங்களுக்கு செய்தது தவறு என்று எல்லோருக்கும் தெரியும். அதை நீங்களும் அறிந்திருந்தும் ஏன் அவருடைய குற்றத்தை அவருக்கு உணர்த்தாமல் அவரோடு சாந்தமாய் பேசினீர்கள் என்று ஒரு வாலிபன் தன் பாட்டனாரிடம் கேட்டான். அதற்கு அவன் பாட்டனார்: மகனே, மதுபோதையினாலே வெறி கொண்டிருக்கும் மனிதனொரு வனுக்கு நீ எவ்வளவு அறிவுரை கூறினாலும் அது அவனுக்குள்ளே போகாது. அவனால் அதை நிதானமாக கிரகித்து அறிய முடியாது. அது போல, மனிதர்கள்தமது வாழ்வில் மூர்க்கவெறி கொள்வதுண்டு. அந்த வேளையிலே மனிதர்கள் மனதிலே காரிருள் சூழ்ந்திருப்பதால் அவர்களால் நிதானமாக சிந்திக்க முடியாது. அவர்களுக்கு தாங்கள் செய்வது மட்டுமே சரியென்றும், மற்றவர்கள் எல்லோருமே பிழை என்றும் தோன்றுகின்ற வேளையிலே எங்களால் அவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் கற்றுக் கொடுக்க முடியாது. அதுபோலவே எனக்கு தீங்கு செய்த அந்த மனிதனுடைய நிலையும் தற்போது இருக்கின்றது. அவன் புத்தி தெளிகின்ற வேளையிலே அவன் தன்னுடைய குற்றத்தை உணர்ந்து கொள்வான். அந்த வேளையிலே அவனோடு நீதி நியாயங்களை பேசிக் கொள்ளலாம். அந்த மனிதன் நடந்து கொண்டது போல நானும் முன்பு நடந்து கொண்டிருந்த நாட்களுமுண்டு என்று தன் பேரனுக்கு அறிவுரை கூறினார். ஆம் பிரியமானவர்களே, நாம் நம்முடைய வாழ்விலே எத்தனை முறை தவறியிருக்கின்றோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம். அந்த வேளைகளிலே நமக்கு அறிவுரைகூறுபவர்களின் ஆலோசனையை உடனடியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதான நிலையில் நாம் இருந்தோமா? அல்லது அந்த வேளைகளிலே தேவ ஆலோசனையின் வழியில் நடக்க நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்தோமா? நாட்கள் கடந்து சென்ற பின், நம்முடைய உண்மை நிலையை நாம் அறிந்த போது, மனம் வருந்தினோம்? நாம் உணர்வடைந்து புத்தி தெளியும் வரை எத்தனையோ நாட்களாய் அன்புள்ள ஆண்டவராகிய இயேசு நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருந்து வந்தார். தெய்வீக சுபாவங்கள் நம்மில் இருந்தால், இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் நீடிய பொறுமையாய் இருப்பது போல நாமும், நமக்கெதிராக குற்றம் செய்பவர்களுக்கு இரக்கத்தை காண்பிப்போமாக.

**2 பேதுரு 3:9**

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள தேவனே, எத்தனையோ தடவைகள் என்னுடைய மனதை கடினப்படுத்திய போதிலும், நீர் தயவாய் மன்னித்தது போல நானும் மற்றவர்களை மன்னிக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**ஞாயிறு | வைகாசி 23** 📖 மாலை வாசகம் – நீதி 20:23

# அளக்கப்படும் அளவு

ஒரு ஸ்தாபனத்தின் இயக்குனர், தன்னுடைய வீட்டிலே திருத்த வேலைகளை மிகவும் குறைந்த செலவிலே செய்ய வேண்டும் என்று, திருத்த வேலைகள் செய்ய வந்த மனிதனிடம், அவன் கூறும் விலையைவிட மிகவும் குறைந்த விலைக்கு திருத்த வேலைகளை செய்யும்படி கேட்டுக் கொண்டான். நாள் கூலிக்கு வேலை செய்யும் அந்த மனிதன், இந்த வேலையைவிட்டால், எனக்கு இன்று படி இருக்காது, குடும்பம் பட்டினி இருக்க நேரிடும் என்று அந்த திருத்த வேலையை மிகவும் குறைந்த பணத்திற்கு செய்து கொடுத்தான். அந்த இயக்குனர், தன் நிலையை நியாயப்படுத்தும்படி திருத்த வேலைக்கு நான் கொடுக்கும் பணம், திருத்துபவர் செய்யும் வேலைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று கூறினார். ஆனாலும் தான் வேலை செய்யும் ஸ்தாபனத்திலோ தனக்கு கிடைக்கும் சம்பளமும் சலுகையும் எப்போதும் அதிகமாக இருக்க வேண்டுமென்பதை விரும்பினான். தான் செய்யும் வேலைக்கு ஏற்றதாக சம்பளம் கொடுங்கள் என்று அவன் ஒரு போதும் தன் ஸ்தாபனத்தின் அதிபரிடம் கூறுவதில்லை. இவ்வண்ணமாகவே, சில மனிதர்கள் "தங்களுக்கு ஒரு நியாயத்தையும் மற்றவர்களுக்கு இன்னுமொரு நியாயத்தையும் வைத்திருக்கின்றார்கள்". இவ்வண்ணமாகவே, என் மகன் குற்றம் செய்தால், அது உலகத்திற்கு தெரியக் கூடாது. மற்றவர்கள் மத்தியிலே அவன் அவமானப்படக் கூடாது. அதை இரகசியமாக கையாள வேண்டும். தேவன் அதை கருணையாய் மன்னித்துவிட வேண்டும் என்று கூறுகின்ற சிலர், இன்னுமொருவருடைய மகன் குற்றம் செய்தால், அதை பகிரங்கமாக்கி, அவனை அவமானப்படுத்தி விடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் சுயநலமுள்ளவர்கள். பிரியமானவர்களே, நாம் சுய நீதியின்படி வாழக் கூடாது. உலகத்திலே ஒரு நீதி உண்டு அதுவும் குறைவுள்ளது. ஆனால் தேவ நீதியோ எப்போதும் நிலைநிற்கும் என்பதை மறந்துவிடாதிருங்கள். "மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." "நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். வெவ்வேறான நிறைக்கற்கள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் கள்ளத்தராசு நல்லதல்ல. உங்கள் நிறைகற்கள் கர்த்தருடைய பார்வையிலே நியாமுள்ளவைகளாக இருப்பதாக.

**லூக்கா 6:38**

**நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.**

**ஜெபம்**: நீதியின் தேவனே, நான் என் சுயநீதிக்கும், இந்த உலகத்தின் நீதிக்கும் விலகி, தேவ நீதியை என் வாழ்வில் நிறைவேற்றுபவனாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக.. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கட்டளைகள் எதற்காக?

ஒரு ஆசிரியரியரானவர் தன் வகுப்பிலுள்ள ஒரு மாணவன் படிக்கக்கூடிய வசதிகள் அவனுக்கிருந்தும், அவன் தன் பாடங்களிலே கவனமற்றிருப்பதைக் கண்டு கொண்டார். அந்த மாணவனை அப்படியே விட்டு விடாமல், அவனுடைய பாடசாலை வேலைகளை கவனமெடுத்து, அவன் தவறுகின்ற வேளைகளிலே அவனுக்கு அறிவுரைகளை கூறி, அவனை அவ்வப்போது கண்டித்துக் கொண்டார். ஆனால் அந்த மாணவனோ, தன் வகுப்பாசியர் தன்னை கண்டிக்கின்றார் என்று தன்பெற்றோரிடம்முறையிட்டான். பெற்றோர் வகுப்பாசிரியரோடு பேசியபோது,தங்கள் மகனுடைய உண்மை நிலையை அறிந்து கொண்டார்கள். பெற்றோரும் அந்த ஆசிரியரோடு இணைந்து தங்கள் மகனுடைய காரியத்திலே மிகவும் கவனமுள்ளவர்களாக, வீட்டிலே சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தினார்கள். அந்த சூழ்நிலையானது, அந்த மாணவனுக்கு, அப்போது சற்று கசப்புள்ளதாக இருந்தாலும் சில ஆண்டுகள் சென்றபின்பு, அவன் பெரியவனாகி நல்ல உத்தியோகத்திலே அமர்ந்தான். பாடசாலை நாட்களிலே, குறிப்பிட்ட அந்த ஆண்டிலே தன்னுடைய வகுப்பாசிரியரும் தன்னுடைய பெற்றோரும் தன் நிலைமையை ஒழுங்குக்கு கொண்டு வந்திராவிட்டால், தான் இந்த நிலைமைக்கு வந்திருக்க மாட்டேன் என்பதை உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, தங்கள் பிள்ளைகளை அன்பு செய்யும் பெற்றோர், வீட்டிலே அவர்களுக்கு ஏன் ஒழுங்கு முறைகளை கொடுக்கின்றார்கள். தங்கள் பிள்ளைகள் வாழ்விலே நன்மையை கண்டடைய வேண்டும் என்பதற்காக அல்லவா. நல்ல ஆசிரியர்கள் ஏன் மாணவர்களை கண்டித்து நடத்துகின்றார்கள். மாணவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அப்படி செய்கின்றார்கள். இந்த உலகத்தை சார்ந்தவர்கள் அப்படியிருந்தால், நம்முடைய பரலோக பரமபிதா எவ்வளவு அதிகமாக நம் வாழ்வின் நன்மையைக் குறித்து கரிசனையுள்ளவராக இருப்பார் என்பதை சிந்தித்துப்பாருங்கள். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. அதன் வழியில் நடக்கின்றவர்களோ நன்மையை கண்டடைகின்றார்கள்.

**உபாகமம் 10:13**

நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்

**ஜெபம்**: அன்பின் தேவனே, நான் பாவ வழிகளிலே அழிந்து போகாதபடிக்கு, பரலோகிலே நித்திய வாழ்வை பெற்றும் கொள்ளும்படி உம்முடைய கற்பனைகளை கைக்கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெயமோ கர்த்தரால் வரும்

சாமுவேல் என்னும் தேவ ஊழியரின் நாட்களிலே, தேவனாகிய கர்த்த ர்தாமே நியாயாதிபதிகள் வழியாக தம்முடைய ஜனங்களை வழிநடத்தி வந்தார். அந்நாட்களிலே ராஜாக்கள் ஆட்சி செய்யவுமில்லை, பெரிய அரண்மனைகளும் இருந்ததில்லை. ராஜாவிற்கு ஆலோனை கூற மந்திரி சபை இருந்ததில்லை. ராஜாவிற்கு சேவை செய்ய பணிவிடைக்காரரும் இருக்கவில்லை. தேவாதி தேவன் தாமே, தம்முடைய நியாயாதிபதிகள் வழியாக ஜனங்களை நடத்தி வந்தார். அந்த நியாயதிபதிகளுக்கு தேவனே தலைவராகவும், ஆலோசனைக் கார ராகவும் இருந்து வந்தார். ஆனால் தேவ ஜனங்களோ, மற்றய தேசங்க ளிலே இருப்பது போல, தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று நியாயா திபதியாகிய சாமுவேலிடத்தில் முறை யிட்டார்கள். இந்த கோரிக்கையின் கருப்பொருள் என்ன? தலைமுறை தலைமுறையாக ராஜரீகம் பண்ணுகி றவரும், மிகுந்த கிருபையுள்ளவருமாகிய, தேவன் நியமித்த ஒழுங்கு முறைகளை தள்ளிவிட்டு ஒரு ராஜாவானவர் தங்களை வழிநடத்தி செல்வார் என்ற எண்ணம் அவர்களுக்குள் குடிகொண்டது. தேவ ஆலோ சனையைவிட, ராஜாவினதும் அவன் நியமிக்கும் மந்திரிகளின் ஆலோ சனைகளும் தங்களுக்கு பலன் தரும் என்று நினைத்தார்கள். தேவனு டைய பாதுகாப்பைவிட ராஜாவின் படைப்பலம் தங்களுக்கு வெற்றி கொடுக்கும் என்று நினைத்தார்கள். "சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டு வோம். தங்கள் பெலத்தை குறித்து மேன்மைபாராட்டுகி ன்றவர்கள் முறி ந்து விழுவார்கள். கர்த்தரை நம்பியிருக்கின்றவர்களோ நிமிர்ந்து நிற்பா ர்கள். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெய மோ கர்த்த ரால் வரும்." என வேதத்திலே எழுதப்பட்டிருக்கின்றது. எனவே கர்த்தர ால் நியமிக்கப்பட்ட ஆளுகையை அசட்டை செய்யாதிருங்கள். கர்த்த ருடைய ஆலோசனையை அற்பமாக எண்ணாதிருங்கள். உங்களுக்கு உண்டான கல்வி, செல்வம், அந்தஸ்துக்களினால் உங்கள் காரியங்கள் வாய்க்கும் என்று அவைகளிலே உங்கள் நம்பிக்கையை வைக்காதிரு ங்கள். கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியு மில்லை, ஆலோசனையுமில்லை. அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாதது.

**சங்கீதம் 20:7**

**சிலர் இரதங்களைக்குறித் தும், சிலர் குதிரைகளை க்குறித்தும் மேன்மைபா ராட்டுகிறார்கள் நாங்க ளோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை க்குறித்தே மேன்மைபாரா ட்டுவோம்.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்த உலகத்தின் ஆளுகைக்குள் நான் சிக்கிவிடாதபடிக்கு எப்போதும் உம்முடைய ஆளுகைக்குள் இருந்து உம்முடைய ஆலோசனையின்படி வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் வாழ்வின் மேன்மை என்ன?

ஒரு ஊரிலே வசித்து வந்த சிறுமியானவளுக்கு மிகவும் இனிமையான குரல் வளம் இருந்தது. தேசிய மட்டத்திலே நடைபெற்ற முக்கியமான விழா ஒன்றிலே, தேசிய கீதத்தைப் பாடும் குழுவிலே அவள் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். அதனிமித்தம் அவள் வசித்து வந்த ஊரிலுள்ள ஜனங்கள் அவளைக் குறித்து பெருமிதமாக பேசிக் கொண்டார்கள். அவள் குடும்பத்தாரும் உறவினரும் அவளைக் குறித்து பெரு மகிழ்ச்சிய டைந்தார்கள். அதிகாரிகள், பிரபுக்கள் முன்னிலையிலே தேசிய கீதத்தைப் பாடுவதற்குரிய சந்தர்ப்பம் குறிப்பிட்ட ஒரு சிலருக்கே கிடைப்பதுண்டு. உண் மையிலேயே அது பாராட்டக்கூடிய ஒரு விடயம். ஆனாலும், அவளுடைய தகப் பனானவர், அவள் அந்த ஊரிலுள்ள சிறிய ஆலயத்திலே, தேவ கானங்களைப் பாடுவதையே அதிக மேன்மையாக எண்ணிக் கொண்டார். பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும சில மேன்மைபாராட்டத் தக்க விசேஷ நிகழ்வுகள் உண் டாயிருக்கலாம். சிலர் தாங்கள் அரசாங்கத்திலே முக்கிய பதவியிலே இருப்பதைக் குறித்து மேன்மைபாராட்டுகின்றார்கள். இன்னும் சிலர் தாங்கள் உலக பிரசித்தி பெற்ற வியாபார ஸ்தாபனங்களிலே வேலை செய்கின்றோம் என்று மேன்மைபாராட்டுகின்றார்கள். இன்னும் சிலர் குறிப்பிட்ட பாடமொன்றிலே தாங்கள் அதிவிசேட சித்தி பெற்றதைக் குறித்து மேன்மை பாராட்டுகின்றார்கள். இதற்கு சில தேவ பிள்ளைக ளும் விதிவிலக்கு அல்ல. எடுத்துக்காட்டாக, என்னுடைய மகள் ஞாயிறு தோறும் ஆலயத்திலே சர்வத்தையும்படைத்த தேவாதி தேவனை துதித்துப் புகழ்பாடுவாள் என்று கூறுவதைவிட, தேசிய மட்டத்திலே நடந்த விழா ஒன்றிலே, பல அதிகாரிகள், பிரபுக்கள், நட்சத்திரங்கள் முன்னிலையிலே என் மகள் தேசிய கீதம் பாடினாள் என்பதைக் குறி த்தே அதிக மேன்மையாக பேசிக் கொள்வார்கள். தேவாதி தேவனுக்கு ஊழியம் செய்வதைவிட, உலக பிரபுக்களுக்கு வேலை செய்வதை அதிக மேன்மையாக சொல்லிக் கொள்வார்கள். உங்கள் வாழ்வின் மேன்மை என்ன என்பதைக் குறித்து இன்று சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவாதி தேவனுடைய சமுகத்திலே நிற்பதற்குரிய சிலாக்கியம் எவ் வளவு மேன்மையானது என்பதை அறிந்து கொள்ளுங்கள். தேவனு டைய சமுகத்திலே தங்கியிருப்பவர்கள். பாக்கியம் பெற்றவர்கள். அவர்கள் எப்பொழுதும் தேவனை துதித்துக்கொண்டிருப்பார்கள்.

**சங்கீதம் 84:10**

**ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது;**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்மை நான் அப்பா பிதாவே என்று அழைக்கத்தக்கதாக நீர் எனக்கு கொடுத்திருக்கும் மகா மேன் மையான பாக்கியத்தை உணர்ந்து கொள்ளும் இருதயத்தை தந்த ருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | வைகாசி 27    📖 மாலை வாசகம் - லூக்கா 17:10

# மனத்தாழ்மையோடு பணி செய்யுங்கள்

ஒரு சனசமூக நிலையமொன்றிலே அங்கத்தவனாக இருந்த செல்வந்தன், அந்த சனசமூக நிலையத்தால் மேற்கொள்ளப்படும் சில நன்மை தரும் செயற்திட்டங்களுக்கு தாராளமாக உதவி செய்தான். அதனால் அவன் அந்த ஊர் ஜனங்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தான். ஆண்டுகள் கடந்து சென்றதும், அந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் தனக்கு பிடிக்காத செயற்திட்டங்களுக்கு மட்டும் உதவி செய்வதை நிறுத்திக் கொண்டான். அது மட்டுமல்லாமல், அப்படியாக செயற்திட்டங்களை தொடர்ந்து செய்தால், தான் இன்னுமொரு ஊருக்கு சென்றுவிடுவேன் என்று மிரட்டல்களை அவ்வப்போது மறைமுகமாக கூறிக் கொள்வான். அதாவது, தான் நினைத்த காரியங்களே நடக்க வேண்டும் என்ற நோக்கமும், நான் இல்லாவிட்டால் இவர்களுக்கு பெரும் இழப்பு என்ற எண்ணமும் அவனுக்குள் வளர ஆரம்பித்தது. அந்த சனசமூக நிலையத்தின் வழியாக ஊரின் சேம நலத்திற்காக சேவை செய்வதின் மேன்மையை உணராமல், தன்னிடமிருந்த செல்வத்தால் அந்த நிலையத்தையும், அதன் செயற்பாடுகளையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம் என்ற பெருமை அவன் சிந்தையை ஆட்கொண்டது. பிரியமானவர்களே, இன்றை நாட்களிலே இந்த சம்பவத்திற்கு ஒத்ததாகவே, சபை ஐக்கியங்களிலும் சில மனிதர்கள் உலக ஐசுவரியமுடையவர்களாகவோ, உலக கல்வியறிவுடையவர்களாகவோ அல்லது பற்பல தாலாந்துகள் உடையவர்களாகவோ இருக்கின்றார்கள். தங்களிடம் இருப்பது தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்கள். தேவனுக்கு சேவை செய்வதற்கோ நிபந்தனைகளை முன்வைக்கின்றார்கள். தேவன் கொடுத்த தாலாந்துகளை தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றும் கருவிகளாக பயன்படுத்துகின்றார்கள். தன்னுடைய உள்ளத்தை தேவனுக்கு கொடுக்காதவன், அவருக்கு எப்படி பணி செய்வான்? முழு உள்ளத்தோடு அவரை சேவிப்பவர்கள் தங்கள் பணியை ஆனந்த பாக்கியமென்று அறிந்து, எல்லாவற்றையும் மனத்தாழ்மையோடு செய்வார்கள். தேவ பிள்ளைகளே, பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கின்றார், தாழ்மையுள்ளவர்களுக்கோ அவர் தம்முடைய கிருபையை பொழிகின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**பிலிப்பியர் 2:3**

**ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கின்ற தேவனே, நீர் எனக்குத் தந்தவைகளை, முழு உள்ளத்தோடு உம்முடைய பணிக்காக பயன்படுத்த ஞானமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சோதனைகளை ஜெயங்கொள்ளுங்கள்!

தன் வாழ்க்கை முழுவதும் வன்முறைகளிலும், தெருச் சண்டைகளிலும் ஈடுபாடாக இருந்து வந்த மனிதனொருவன், ஆண்டவராகிய இயேசுவை தன் வாழ்விலே சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அந்த நாள் முதல் அவன் தன் பழைய வாழ்க்கையிலிருந்த குடி, வெறி, தூஷணங்கள், சண்டைகள் யாவற்றையும் விட்டுவிட்டான். முன்பு அந்த மனிதனை கண்டால் ஓடி ஒளிந்து கொள்கின்றவர்கள் இப்போது அவனும் அவன் குடும்பத்தினரும் தெரு வழியாக கடந்து செல்லும் போது, தெருவிலே இருக்கும் வீணரான மனிதர்கள் ஏளனமாக வார்த்தைகளை அவர்கள் காது கேட்கும்படி பேசிக் கொள்வார்கள். பல ஆண்டுகளாய் பொறுமையாக இருந்த அந்த மனிதன், ஒரு நாள் தன் பொறுமையை இழந்து, தெருவிலே ஏளனம் செய்த மனிதர்கள் யாவரையும் அடித்து துரத்தி விட்டான். பல ஆண்டுகளாக பொறுத்திருந்தேன் ஆனால் இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று இப்படிச் செய்தேன் என்று அந்த மனிதனானவன் தன் வன்முறையான செயலைக் குறித்து நியாயம் கூறினான். பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலும், நம்முடைய பழைய வாழ்க்கையில் விட்டுவந்த மாம்ச இச்சைகள் உண்டு. அவை கல்வி, அந்தஸ்து, உலக ஐசுவரியத்தின் பெருமையாக இருக்கலாம், தேவனைத் துதிக்கின்ற நாவினாலே மற்றவர்களை சபிக்கின்ற பழக்கமாக இருக்கலாம், விட்டு வந்த மத வழிபாடுகளின் முறைமைகள் இருக்கலாம், மற்றும் வன்மம், கசப்பு, வைராக்கியம், எரிச்சல், பொறாமை போன்ற மாம்ச இச்சைகள், அல்லது மறைவான பாவங்கள் இருக்கலாம். அவைகள் ஒரு காலத்திலே, இந்த உலகத்தினாலே உண்டான நம்முடைய பெலனாக கருதி நாம் வாழ்ந்து வந்திருக்கலாம். ஆனால் அவைகளை நாம் நஷ்டமும் குப்பையுமென தள்ளிவிட வேண்டும். அவை மறுபடியும் தலைதூக்கும் சந்தர்ப்பங்கள் வாழ்க்கையிலே நிச்சயமாக ஏற்படும். குறிப்பாக சில மனிதர்கள் வழியாக நம்முடைய பழைய வாழ்விற்கு உயிர் கொடுக்கும் சோதனைகள் நமக்கு உண்டாகலாம். அப்படியான சோதனைகள் ஆரம்பிக்கும் வேளையிலே அவைகளை நம் உள்ளத்தில் வேர் கொள்ளவிடாமல், நம் தேவனுடைய வசனத்தினாலும், ஜெபத்தினாலும் நம்முடைய உள்ளத்தை நிரப்பிக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.

**சங்கீதம் 4:4**

**நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள்**

**ஜெபம்**: உம்முடைய சமாதானத்தை எனக்கு தந்த தேவனே, அந்த சமாதானத்தை குழப்புகின்றவர்களுக்கு என் உள்ளத்தில் இடங் கொடுக்காமல் உம் வார்த்தையையே என் தியானமாக கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இல்லமாகிய இருதயம்

ஒரு புதிய வீட்டை வாங்கிய இளம் தம்பதிகள், அந்த வீட்டை அலங்கரிக்கும்படி கடைக்குச் சென்று தங்களுக்கு பிடித்த அழகானதும், தரமானதுமான அலங்காரப் பொருட்களை வாங்கி வந்து, தங்கள் வீட்டை தங்கள் இஷ்டப்படி அலங்கரித்தார்கள். நாட்கள் கடந்து செல்லும் போது, வீட்டின் அழகை கெடுக்கும் பொருட்கள் எவை என்று பார்த்து அவைகளை அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து அகற்றி விட்டார்கள். இவ்வண்ணமாக பலரும் பார்த்து ஆசைப்படும் விதமாக தங்கள் வீட்டை சுத்தமாகவும், அழகாகவும், நல்ல அலங்காரத்தோடும் வைத்திருந்தார்கள். இன்றைய நாளிலே, இந்த சம்பவத்தை மையமாக வைத்து இருதயமாகிய எங்கள் வீட்டை யார் சுத்தப்படுத்தி, அலங்கரித்து, அழகாக வைத்திருக்க வேண்டும் என்பதைக் குறித்து தியானம் செய்வோம். அயலிலே உள்ள மனிதனொருவன், தகாத வார்த்தையால் உங்களை பேசிவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். அன்று இராத்திரியிலே, அவன் கூறிய தகாத வார்த்தைகளை தியானம் செய்வீர்களா? இல்லை நம்முடைய இருதயத்தை சுத்தப்படுத்தும் வேத வார்த்தைகளை தியானம் செய்வீர்களா? பகையினால் உங்கள் இருதயத்தை அலங்கரிக்கப் போகின்றீர்களா? அல்லது தேவ இரக்கத்தினால் பகையை மன்னித்து, இரக்கத்தினால் உங்கள் இருதயத்தை அலங்கரிக்கப் போகின்றீர்களா? தாங்கள் புதிதாக வேண்டிய வீட்டை எவ்வளவு கவனமாக அலங்கரித்து வைத்திருந்த அந்த இளம் தம்பதிகளைப் போல நாமும் நம்முடைய இருதயத்தை எல்லா தெய்வீக சுபாவங்களினாலும் அலங்கரிக்க வேண்டும். மாம்சத்தின் கிரியைகள் உங்கள் இருதயத்தில் குடிகொள்ள இடங்கொடுத்தால், அங்கே ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றிற்கு இடம் இருக்காது. அப்படிப்பட்ட இருதயத்தில் கலகமும் குழப்பமும் உண்டாயிருக்கும். வீட்டிற்கு அவசியமற்ற பொருட்களை அகற்றி விடுவது போல, தேவையற்ற காரியங்களை உங்கள் இருதயத்தை விட்டு அகற்றி விடுங்கள். அழகானதும் தரமானதுமான பொருட்களை வீட்டிற்குள் கொண்டு வருவது போல, தேவ சமாதானத்திற்குரியவைகளையே உங்கள் இல்லமான இருதயத்திற்குள் கொண்டு வாருங்கள். அவைகளே உங்கள் இருதயத்தின் அலங்காரமாக இருக்கட்டும்.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

**ஜெபம்**: தேவ சாயலடையும்படிக்கு என்னை அழைத்த தேவனே, என்னுடைய இல்லமாகிய இருதயம் தெய்வீக சுபாவங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்படி விழிப்புள்ளவனா(ளா)க வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவன் விளம்பிய வேதம்

ஒரு வாலிபன் ஒரு குறிப்பிட்ட பெண்ணொருத்தியை விரும்பியிருந்ததால் அவளை திருமணம் செய்து தரும்படியாக அவளுடைய பெற்றோரை கேட்டுக் கொண்டான். திருமணப் பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போது, அந்த பெண்ணின் வீட்டாரிடம் இருந்த சொத் துக்கள் யாவையையும் அவளுக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு பெண்ணுடைய பெற்றோர்: எங்களுக்கு இன்னும் மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள் எனவே, எல்லாவற்றையும் கொடுத்துவிட முடியாது என்று கூறினார்கள். அதனால் கோபமடைந்த வாலிபன் இந்தத் திருமணம் எனக்கு வேண்டாம் என்று தன் வழியிலே சென்று விட்டான். ஒருவரை ஒருவர் விரும்பியிருக்கும் போது, "நீ என்னுடைய உயிர்" "உனக்காக எதையும் இழக்க தயாராக இருக்கின்றேன்" என்று உணர்வுகளை தூண்டும் பல கவிதைகளை கூறிக்கொள்வார்கள். ஆனால், அந்தக் கவிதைகள் சோதனைக்குட்படுத்தப்படும் போது அதன் உண்மை நிலை வெளியாகின்றது. பிரியமானவர்களே, இந்த சம்பவத்தை சற்று நம்முடைய ஆவிக்குரிய வாழ்வோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய அழைப்பை பெற்ற ஜனங்களும் "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்." என்று கூறிக் கொள்வார்கள். அந்த வசனம் உண்மையானது. ஏனெனில் தேவனுடைய வார்த்தையின் வழியாக மனிதனுக்கு நித்திய ஜீவன் உண்டாகின்றது. இந்த உலகத்திலே நாம் காணும் யாவும் அழிந்து போகும் ஆனால் தேவன் விளம்பிய வேதத்தினாலே நாம் அழியாமையை தரித்துக் கொள்கின்றோம். ஆனால் சோதனை வரும் காலத்திலே சிலர் தேவனுடைய வேதத்தைத் தள்ளி விட்டு, உலகத்தின் பொக்கிஷங்களாகிய பொன்னையும் வெள்ளியையும் பற்றிக் கொண்டு விடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, வேலை செய்யும் இடத்தில் உண்மையைக் கூறினால் வேலை போய்விடும், வேலை போனால் எப்படி உண்பது, எதை உடுத்துவது, யார் வாடகை பணம் கொடுப்பார்கள் என்று சிலர் பொய்யை கூறிவிடுகின்றார்கள். ஆனால், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று வேதம் கூறுகின்றது. எனவே தேவன் நமக்கு கொடுத்த வேதத்தின்படி நாம் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 119:72**

**அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, நித்திய வாழ்வை கொடுக்கும் நீர் விளம்பிய வேதத்தைத் கேட்டு, அறிக்கையிட்டு, அதன்படி உண்மையாய் வாழும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மையை கண்டடைகின்றவன் யார்?

ஒரு ஊரிலே இயங்கி வந்த உடற்பயிற்சி கழகமொன்றிலே, தேச மட்டத்திலே பிரபல்யமான ஒரு வியைாட்டு வீரன் இணைந்து கொண்டதால் அது அந்த கழகத்திற்கு நன்மதிப்பையும் பெருமையையும் பெற்றுத் தந்தது. அதனால், இன்னும் அதிகமான மனிதர்கள் அந்த கழகத்தில் சென்று இணைய ஆரம்பித்தார்கள். கருப்பொருளானது, அந்த பிரபல்யமான விளையாட்டு வீரனால் அந்த அமைப்பிற்கு நன்மை உண்டானது. இவ்வண்ணமாக, இன்றைய நாட்களிலே பிரபல்யமான நட்சத்திரங்களில் ஒருவர் அல்லது இந்த உலக முறைமையின்படி கல்விமானாக கருதப்படுமொருவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் போது, அது கிறிஸ்தவத்திற்கு நல்லது என்று ஒரு சில மனிதர்கள் கருதுகின்றார்கள். ஒரு விஞ்ஞானி, வேதத்திலே தேவ ஆவியினாலே உரைக்கப்பட்டிருக்கும், சத்தியங்கள் அல்லது தீர்க்கதரிசனங்களில் ஒன்று விஞ்ஞானத்தின்படி ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்று கூறும் போது அது தேவனுக்கு நல்லது என்று சிலர் எண்ணுகின்றார்கள். கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே. இந்த உலகிலே மனிதர்கள் கீழ்மக்கள் என்றும் மேன்மக்களென்றும் வகுக்கப்படலாம் ஆனால் மனிதர்கள் பிரபுக்களாக இருந்தாலும், குடிமக்களாக இருந்தாலும், கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளிலே நடக்கின்றவர்கள் மாத்திரமே பாக்கியவான்கள். தேசத்திலுள்ள பிரபு ஒருவன் இயேசுவை ஏற்றுக் கொண்டான் அதனால் நான் இயேசுவை ஏற்றுக் கொள்கின்றேன் என்பது இரட்சிப்பல்ல. அப்படிப்பட்ட மனிதன் இயேசுவின் மேல் அல்ல அந்த பிரபுவின்மேல் தன் நம்பிக்கையை வைத்திருக்கின்றான். ஒரு பாடகன் ஆண்டவர் இயேசுவை தன் உள்ளத்திலே விசுவாசித்து, இரட்சணியப்பாடல்களை பாடுவது அவனுடைய சிலாக்கியம். ஐசுவரியவான் தன் நம்பிக்கையை கர்த்தர்மேல் வைக்கும்படி தன்னைத் தாழ்த்துவது அவன் ஆத்துமாவிற்கு நல்லது. உலகத்திலுள்ள கல்விமான்கள் மெய் ஞானத்தைக் கண்டடையும்படி கர்த்தருக்கு பயப்படுவது அவர்களுக்கு நல்லது. "தேவன் செய்யும் சகல கிரியைகளையும் நான் கவனித்துப்பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் கிரியையை மனுஷன் கண்டுபிடிக்கக் கூடாதென்று கண்டேன். அதை அறியும்படி மனுஷன் பிரயாசப்பட்டாலும் அறியமாட்டான் அதை அறியலாம் என்று ஞானி எண்ணினாலும் அவனும் அதை அறிந்துகொள்ளமாட்டான்." *(பிரசங்கி 8:17)*

**சங்கீதம் 112:1**

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய வார்த்தையின் மகத்துவங்களை நான் உணர்ந்து நன்மையை கண்டடையும்படி எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள்பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்திருக்கின்ற கசப்பை என் மனதில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆழ கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய்த் தேடுகிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிகள் செய்வது உமக்கு லேசான காரியம்!

காரிருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே ஜீவிக்க பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும்.

எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, அடுத்த பக்கத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தில் உங்-கள் விபரங்களை பதிவு செய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

________________________________________

________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

________________________________________

________________________________________

________________________________________

## மேலதிக விபரங்கள்

- [ ] **whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்
- [ ] **Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன்

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ____________________

**மின் அஞ்சல் E-MAIL:**

________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca